The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*



Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

# சூழலியல் திறனாய்வு நோக்கில் தமிழச்சி தங்கப்பாண்டியன் கவிதைகள்

**சி. கீர்த்தனா,** தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவெண்: MKU24PFOL11410, ஸ்ரீ எஸ்.ராமசாமி நாயுடு நினைவுக் கல்லூரி, சாத்தூர், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0000-2590-408X

**முனைவர் ச. தனலெட்சுமி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-3511-2865

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் இலக்கிய உலகம் பரந்து விரிந்த ஒன்று. அவற்றுள் ஆய்வு நோக்கில் இலக்கியங்களை ஆராய்வது சாலச் சிறந்தது. வாசகர்களுக்கு நாளுக்கு நாள் புதிய கருத்தை வழங்கும் படைப்பாளர்கள் தமிழ் இலக்கியத்தில் பலர் ஆவர். அவற்றுள், பெண் இலக்கியவாதிகளில் குறிப்பிடத்தக்கவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் என்பவர் ஆவார். தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழச்சியின் படைப்புகளுள் குறிப்பிடத்தக்க பொருண்மையாக இயற்கைச் சூழல் விளங்குகின்றது. அச்சூழலை சரியான பின்னணியில் எடுத்தியம்புகின்றார் ஆசிரியர். சமூகத்தில் ஏதேனும் ஒரு பிரச்சனை தோன்றி வளரும் போது தான் அதனை களைவதற்கு புதிய இயக்கங்கள் தோன்றுகிறது சமூகத்தில் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியால் இயற்கை மாசுபாடும், அழிவும் எளிதே நடைபெறுகின்றது. அந்த வகையில் தோன்றிய கோட்பாடே சூழலியல் என்பதாகும். இயற்கையோடு இயைந்த வாழ்வியலையும், சூழல் பாதுகாப்பையும் வலியுறுத்தும் முக்கிய அங்கமாக சூழலியல் அமைகின்றது. இலக்கியத்திற்கும், இயற்கைச் சூழலுக்கும் இடையிலான உறவை ஆராய்வதே சூழலியல் திறனாய்வு என்பதாகும். மரம், காற்று, நீர், நிலம், வெளி முதலிய இயற்கை ஆற்றல் மாசுபடுதல், இயற்கைக்கு ஆபத்து வரும் சூழலைப் பேசும் திறனாய்வு நோக்கில் ஆராய்ந்து எடுத்துரைக்கும் வகையில் இவ்ஆய்வு கட்டுரை அமைகின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** சூழலியல், திறனாய்வு, தமிழச்சி தங்கப்பாண்டியன், படைப்புகள்

**முன்னுரை**

இலக்கியங்களை ஆய்வு அணுகுமுறையில் ஆராய்வது என்பது குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும். சூழலியல் திறனாய்வு நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. இயற்கையோடு இயைந்த வாழ்வியலையும், சூழல் பாதுகாப்பையும் வலியுறுத்தும் முக்கிய அங்கமாக விளங்கும் சூழலியலை இலக்கியங்களில் படைப்பாளர்கள் எடுத்துரைக்கும் முறையினை விளக்குவதே சூழலியல் அணுகுமுறை என்பதாகும். இலக்கியத்தில் உள்ள இயற்கையை மட்டும் ஆராய்வதன்றி தனிமனிதனுக்கும் அவனைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்றப் பொருள்களுக்குமான வாழ்வியல் உறவுகளை ஆராய்வதும் சூழலியல் ஆகும். தமிழச்சி தங்கப்பாண்டியன் கவிதைகளில் புலனாகும் இயற்கைக் கூறுகளை வெளிக்கொணரும் நோக்கில் இவ்ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

**தமிழச்சியின் கவிதைத் தொகுப்புகள்**

விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு எனும் சிற்றூரில் பிறந்தவர் தமிழச்சி (சுமதி).
**படைப்புகள்:** 1. எஞ்சோட்டுப்பெண், 2. வனப்பேச்சி, 3. மஞ்சணத்தி, 4. அருகன், 5. அவளுக்கு வெயில் என்று பெயர்.

**திறனாய்வு**

ஒரு படைப்பை ஆராய்ந்து, இலக்கிய கோட்பாடுகளின் அடிப்படையில் கருத்தை பதிவு

Academic Research News
*Peer-Reviewed Journal*

Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

செய்வதே திறனாய்வு. மதிப்பீடு, அழகியல், சமூகவியல், ஒப்பீட்டு திறனாய்வு என்று பல வகைகளில் திறனாய்வு அமைகின்றது.

**சூழலியல் திறனாய்வு**

புதிதாக வளர்ந்து வரும் திறனாய்வு என்பதால் பல்வேறு விளக்கங்களம், பல்வேறு கோணத்தில் பேசப்படுகின்றன. **"இலக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள உறவினைக் கற்பதே சூழலியல் திறனாய்வு**" என்று அமெரிக்காவில் நெரேடா பல்கலைக்கழகத்தில் **'இலக்கியமும் சுற்றுச்சூழலும்'** என்ற தனித்துறையில் பேராசிரியராகப் பணியாற்றும் செரில் கிலாட்பெல்டி என்பவர் சூழலியல் திறனாய்விற்கு வரையறை தருகிறார். சூழலியல் என்ற சொல்லை; முதன்முதலில் **'இலக்கியமும் சூழலியலும்., சூழலியல் திறனாய்வில் ஒரு சோதனை'** என்ற கட்டுரையில் **'வில்லியம் ரூக்கர்ட்'** என்பவர் தான் பயன்படுத்தயுள்ளார். கிட்டத்தட்ட பத்துஆண்டுகளாக யாரும் பேசப்படாத சூழலில் 1989 ல் தான் செரில் கிலாட்பெல்டி என்பவர் ரூக்கர்ட்டின் அந்தச் சொற்கூட்டை மீண்டும் பயன்படுத்தி சூழலியல் திறனாய்விற்கு உயிர் கொடுத்துள்ளார்.

**"ஒரு நூற்றாண்டுத் தொடக்க காலச் சூழலியல் திறனாய்வுகள்"** என்ற கட்டுரைத் தொகுப்பு நூலில், டேவிட் மார்சல் என்பார், 'சூழலியல் திறனாய்விற்கு ஒரு வரலாற்று முகத்தை உருவாக்கினார். இலக்கிய உருவாக்கத்தில் தொடர்ந்து, இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவு குறித்த தேடல் ஒரு பெரும் வெளியாகச் செயல்பட்டு வந்துள்ளது என்ற உண்மை வெளிக்கொணரப்பட்டது. (இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப. 354) லாரன்ஸ் பௌல் என்பவரால் சூழலியல் திறனாய்வு மேலும் வளரத் தொடங்கிற்று. 'சுற்றுச்சூழல் திறனாய்வின் எதிர்காலம்'என்ற அவருடைய நூல், பின் அமைப்பியல் கோட்பாடுகளையும் பயன்படுத்திக் கொண்டு இத்திறனாய்விற்குச் செறிவூட்டியது

**சூழலியல் சொற்பொருள் விளக்கம்**

சூழலியல் என்னும் சொல்லினை 'சூழல் + இயல்' என்னும் முறையில் பிரிக்கலாம். சூழல் என்றால் 'சுற்றுப்புறம்' என்று கோணார் கையகராதி விளக்கம் தருகின்றது. சூழலை ஆங்கிலத்தில் 'Environment' என்று அழைப்பர். **"The Surrounding In W}ich A Person Animal Or Plant Lives. The Natural World"** என Oxford English Mini Dictionary, விளக்கம் தருகின்றது.

ஒரு உயிரினம் வாழும் அல்லது செயல்படும் அனைத்து வெளிப்புற நிலைகளையும் உள்ளடக்கியதே சூழலியல். உயிரினங்களுக்கும் அவற்றின் சுற்றுப்புறச் சூழலுக்கும் இடையிலான தொடர்பையும் விரித்துரைக்கின்றது.

**நிலம் தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் (தொல். பொருள். மரபியல், நூ. 644)**

என்பதில் இவ்வுலகமானது ஐம்பூதங்களால் ஆனது என்று தொல்காப்பியர் கூறுகிறார். இயற்கைப் பற்றிய புரிதலும், இன்றியமையாமையின் தேவையும் பண்டைத்தமிழர்களிடம் விளங்கப்பெற்றது.

**கார்க் கரும்பின் கமழ் ஆலைத்**
**தீத்தெறுவின் கவின்வாடி**
**நீர்ச் செறுவின் நீள் நெய்தல்**
**கோள் தெங்கின் குலைவாழைக்**
**காய்க்கமுகின் கமழ் மஞ்சள்**
**இனமாவின் இணர்ப்பெண்ணை**
**முதற்சேம்பின இளை இஞ்சி" (பட்டினப்பாலை,பா. 9-19)**

எனும் பாடலில் காற்று மாசுபாட்டினைத் தடுக்க மரங்கள் பயன்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. இவ்வாறு சங்கத் தமிழர்களோடு சூழலியல் சார்ந்த செய்திகள் பரந்து விரிந்து காணப்படுகின்றன என்பதை உணரலாம்.

**Volume 3, Issue 2, December 2025** **E-ISSN: 2584-167X**

**தமிழில் சூழலியல் திறனாய்வு**

நவீன சூழல் பிரச்சனைகளை, இலக்கியத்தின் வழியாகப் புரிந்து கொண்டு தீர்வு காண்பதற்கும், இயற்கையை நேசிக்கும் மனப்பான்மையை வளர்ப்பதற்கும் சூழலியல் திறனாய்வு உதவிப் புரிகின்றது. சூழலியல் திறனாய்வு என்பது வெறும் இலக்கிய ஆய்வு மட்டுமின்றி, நிலத்தையும் உயிரினங்களையும் பாதுகாப்பதற்கான ஒரு சமூகவியல் கருவியாகவும் செயல்படுகிறது. ஒரு மொழியின் இலக்கியங்களில் சூழலியல் இருக்கும். ஆனால், இலக்கியமே சூழலியலாக இருப்பது தமிழ் இலக்கியம் மட்டுமே. தொல்காப்பியரின் திணைக்கோட்பாட்டு முதல் தற்கால இலக்கியங்கள் வரை அனைத்து இலக்கியங்களும் சூழலியல் இடம்பெறுகின்றது. இயற்கைக்கும் செயற்கைக்குமான வேறுபாடு அறியப்படுகின்றது.

**முதலெனப்படுவது நிலமும் பொழுது இரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே (தொல். பொருள்., நூ. 4)**

என்று தொல்காப்பியம் பொருளதிகாரம் சூழலியலை இயம்புகின்றது. தமிழ் இலக்கியத்தில் சூழலியல் கோட்பாட்டை, அதாவது சங்க இலக்கியப் பாடல்களிலும், தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டிலும் சூழலியல் திறனாய்வை நிகழ்த்திக் காட்டுகிறார் நிர்மல் செல்வமணி. இவர் தம் நூல்களுக்கு, TINAI I, II, III என்று பெயர் சூட்டிச் சங்க இலக்கியக் கவிதைகளையும், தமிழர் தம் திணைக்கோட்பாட்டையும் சூழலியல் திறனாய்வு மூலமாக உலக அரங்கிற்கு எடுத்துச் செல்கிறார்.

Indian Journal Of Ecocriticism என்ற ஆங்கில இதழையும், சூழலியல் திறனாய்விற்கென்று கொண்டு வருகிறார். இயற்கைக்கும் மனிதர்களுக்குமான உறவை மூன்று தளத்தில் நிர்மல் செல்வமணி பிரிக்கிறார்.

1. **ஒருங்கிணைந்த தளம்**
2. **அதிகாரப் படிநிலைத் தளம்**
3. **ஒழுங்கு சிதைத் தளம்**

ஒருங்கிணைக்கப்பட்ட முதல் தளத்தில் இறைநிலை, இயற்கை, பண்பாடு, மனிதர்கள் ஆகியவை இணக்கமாக உள்ளன. இங்கே உறவுகள் மேல், கீழ் என்றில்லாமல் நெடுக்காகவும், குறுக்காகவும் என்று சம தளத்தில் உள்ளன.

அதிகாரப் படிநிலைத் தளத்தில், இறைநிலை மேலாகவும், இயற்கை கீழாகவும், மனிதர்கள் நடுவிலுமாக உள்ளனர். ஆள்பவர் மேலாகவும், ஆளப்படுவர் கீழாகவும், படிநிலைப்படுத்தப்படுகின்றனர். நிலம் கூட நன்செய் நிலம் உயர்ந்ததாகவும், புன்செய் நிலம் கீழானதாகவும் படிநிலைப்படுத்தப்படுகின்றது. விலங்குகள் உலகிலும் கூட வீட்டு விலங்குகள் உயர்ந்தவையாகவும், காட்டு விலங்குகள் கீழானவையாகவம் எட்டமைக்கப்படுகின்றன. ஒழுங்கு சிதைத் தளத்தில் படிநிலைகள் குழப்பத்திற்கு உள்ளாகின்றன. இறைநிலை சந்தேகத்திற்குள்ளாகின்றன. சமய உணர்வுகளை விடப் பணமெ மனித மனத்தில் பெரிய இடத்தைப் பிடித்துக் கொள்கிறது. இயற்கைக் கூடப் பணம் கொட்டும் ஒரு முதலீடாக மாற்றப்படுகிறது. அதைவிட இன்னும் மனிதர்களே ஒரு முதலீடாக மட்டுமே மாறி விடுகிறார்கள். மேற்கண்ட சிந்தனைகளை நிர்மல் செல்வமணி, தொல்காப்பியரின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் கோட்பாட்டோடும் சங்க இலக்கியப் பாடல்களோடும் சான்று காட்டி விளக்கும் போது சூழலியல் திறனாய்வின் அருமை புலப்படுகிறது.

**மழை**

மழை உலக உயிர்கள் வாழ்வதற்குக் காரணமாக அமைகின்றது. மழை வெறும் நீராக இல்லாமல், மனித உணர்வுகளோடும், அறிவியலோடும் பிணைந்த ஒரு அங்கமாகக் கருதப்படுகிறது. இயற்கையைப் போற்றி வணங்கியவர்கள் நம் தமிழர்கள். நவீனத்

தொழில்நுட்பத்துடன் இன்று கண்டறியும் அனைத்து உண்மையையும், தமிழர்கள் முன்பே கண்டறிந்து உணர்ந்தவர்கள். “மழை கொண்டுள்ள நினைவுகளின் நிமித்தம், வலிகள் மறைந்து வேகம் பிடிக்கும். மானுட சமூகம் எவ்வாறு இருக்கின்றதோ, அதை வைத்தே இயற்கைச் சூழல் இருக்கும். இயற்கைச் சூழல் எப்படி இருக்கிறதோ, அதன் படியே வாழ்வு அமையும். இந்த பூமி மீதான தோல், மழைக் கொண்டே ஈரமாக்கப்படுகின்றது. மேகம் கறுத்து ஈரக்காற்று பட்டு மழையாகி பூமி வந்து மீண்டும் வெயில் பட்டு அதே மழை வேகமாய் மீண்டும் கறுத்து மழை பொழிகிறது. இவையாவும், இயற்கையின் சித்திரங்கள்” என்று திவாகரம் தெய்வப் பெயர்த் தொகுதி விளக்கம் தருகின்றது. மழைக்குப் பல வடிவங்கள் உண்டு. காற்றோடு பெய்யும் மழை, இடியுடன் கூடிய மழை, பனிக்கட்டி மழை, சாரல் என்று பலவகையில் அறியப்படும் மழைக்கும் அவற்றின் தன்மைக்கேற்ப பெயர்களும் வைத்துள்ளனர். “துவலை, பெயலை, துளி, மாரி, உறை, பெயல், ஆலி, உதகம், சிதறி, தூவல்,வருடம், சாரல்” என்பவையாகும்.

**“மாரியுமுண்டு ஈங்கு உலகு புரப்பதுவே” (புறநானூறு, பா. 107)** என்னும் வரியில் கொடை வள்ளல்களில் சிறந்தவரான பாரியின் கொடைத்தன்மையை மழையோடு ஒப்பிட்டு பாடுகிறார் புலவர். மேலும், **“மாமலை முழக்கின் மான்கணம் பனிப்பக்” (பதிற்றுப்பத்து, பா. 50)** காற்று மேகத்தில் மோதுவதால் விரைவாக பொழியும் மழையினை இவ்வரிகள் விவரிக்கின்றது. மழை அதிகமானால் சுற்றுப்புறம் இருக்கும் நிலையினை வைத்தும், அதை விரும்பும் மானுட மனதை வைத்தும் கவிஞர்,

**விட்டுச் சென்ற சேறாகவும்**
**விரும்பித் தாவும் குழந்தையாகவும்**
**ஒவ்வொருவருக்கும்**
**ஒரு துளி மழை (வனப்பேச்சி, ப. 101)**

இவ்வாறு பெய்யும் மழை சிலருக்கு மனம் குழந்தையாகவும், சிலர் வெறும் சேறாகவும் எண்ணுவர் என்று விளக்குகிறார். கருமையான வானம் பெரும் சத்தத்துடன் இடி இடித்து மின்னி மழைக்குரிய மேகக் கூட்டத்தோடு கடலில் சென்று நீர் முகந்து வரம் மழையினை,

**இரு விசும்பு அதிர மின்னி**
**கருவி மாமழை கடல் முகந்தனவே (நற்றிணை, பா. 329)**

என்று மழை பொழியும் விதத்தினை விளக்குகிறது.

கூர்மையான மழையின் அழுகையை புறக்கணிக்கப்பட்ட இராப்பிச்சையின் பசியுடன் ஒப்பிடும் நுணுக்கமான மனித உணர்ச்சியினை,

**உதாசீனப்படுத்தப்பட்ட**
**இராப்பிச்சையின் பசியாய்**
**கதவருகே தேம்பிருந்தது**
**உக்கிரமான மழையின்**
**ஒரு கேவல் (வனப்பேச்சி, ப. 105)**

என்பதில், இரவில் இராப்பிச்சைக்காரன் வந்தால், அவனை ஒரு பொருட்டாக எண்ணாமல், உதாசீனப்படுத்துவது போல் இரவும் மழையும் அமைகின்றது. இரவில் பெய்யும் மழையில் மனித மனதில் மகிழ்ச்சி பொங்காது என்பதை ஆராய்கிறார். ஆழ்ந்த சிந்தனையை வெளிப்படுத்தும் படிமமாக அமைகின்றது இக்கவிதை. இரவு மழை ஒரு இயற்னை நிகழ்வாக இல்லாமல், பாத்திரங்களின் மனநிலை மற்றும் சூழலை மேம்படுத்தும் ஒரு சக்தி வாய்ந்த கலைக்கூறாக உள்ளது.

மழையால் மக்களுக்கு துன்பமும், அச்சமும் ஏற்படும் என்பதையும், கவிஞர்

**மழைச்சனியன் வந்தாலே**
**… முழு மூச்சாய்**
**நீரடித்துச் சென்ற**

**காரோட்டியைச்**
**சாபமிட்டுச் சேறாகிப் போன மனது (எஞ்சோட்டுப்பெண், ப. 174)**

எனும் கவிதை பெய்யும் மழையால் வியாபாரியின் துன்பத்தையும், மழையை விரும்பும் மனதையும் சாலையோரம் செல்லும் காரோட்டியால் சேறாக்கியதையும் விரித்துரைக்கிறார்.

**மழை துவங்கும் முன்பு**
**வீட்டை விட்டு புறப்பட்டவர்களாய்**
**மழை நின்ற பின்பு**
**வீடு திரும்டபுவர்கள் இருப்பதில்லை**
**சல்லாபிப்பவர்களாகவோ**
**சபிப்பவர்களாகவோ**
**இடையில் பெய்த மழை**
**எப்படியோ மாற்றி விடுகிறது நம்மை (மஞ்சணத்தி, ப. 111)**

என்பதில் பெய்யும் மழையானது சமூகத்தில் பயணிக்கும் மனித மனத்தை விரும்புபவர்களாகவும், வெறுப்பவர்களாகவும் மாற்றுகிறது. மழைக்காலத்தில் ஏற்படும் தொல்லைகள் மற்றும் இடையூறுகளை பலவாறு கூறலாம். குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதில் இருந்து, பாதையோர வியாபாரிகள் வரை மழைக்காலத்தில் அலதியுறுவர். மழையை விரும்பும் மனமும், வெறுக்கத் தொடங்கும். பெய் மழையை 'சனியன் பிடித்த மழை' என்று கூறுமளவு மழையின் தன்மை மாறுவதையும் அறியலாம்.

வானத்தைக் கூர்மையான ஆயுதத்தால் கிழித்தாற் போல கொட்:டும் கனமழையை 'பேய் மழை' என்று அழைப்பர். பண்டையத் தமிழ்ச் சமூகத்தில் மீவியல்பு ஆற்றல்களின் தாக்கத்தோடு இயற்கையின் அதீதத் தன்மையை உணர்த்தச் இச்சொல் பயன்படுத்தப்பட்டடுள்ளது. மழையானது பெய்யும் அளவினைப் பொறுத்து பேய் மழை, கனமழை, இடைவிடாப் பெருமழை என்றெல்லாம் விளக்கியுள்ளனர்.

**பெயல் சேர் மதி போல, வாள் முகம் தோன்ற**
**பல ஒலி கூந்தலாள், பண்பு எல்லாம் துய்த்துத்**
**துறந்தானை உள்ளி, அழூஉம் அவனை**
**மறந்தாள் போல் ஆலி நகூஉம் மருளும் (கலித்தொகை, பா. 145)**

எனும் பாடலில், தழைத்திருக்கும் கூந்தலை உடைய ஒருத்தி, தன் குணங்களை எல்லாம் நுகர்ந்து தன்னைக் கைவிட்டவனை நினைத்து நெட்டுயிர்க் கொள்ளும் நெஞ்சு சுழலும். பேய்கின்ற மழையைச் சேர்ந்த மதி போல தன்முகம் தோன்றும். இவ்வாறு தலைவி அழும் அழுகைக்கு மழையும், மழை பெய்யும் பொழுது இருக்கும் நிலவின் தன்மைக்கு தலைவியின் முகமும் ஒப்பிடப்பட்டுள்ளது.

பேய் மழையினை தமிழச்சி தங்கப்பாண்டியன் 'அதிகார மழை', 'கோபக்கார மழை, அசுர மழை' என்கின்ற சொல்லாடல்களில் விளக்குகிறார். இதனை,

**குடை இருட்டில் எழுதப்பட்ட**
**கருணை மனுவை**
**எடுத்து நீட்டுவதற்குள்**
**கூரையைப் பிய்த்துக்**
**குப்பையில் வீசுகிறது**
**இந்த அதிகார மழை (மஞ்சணத்தி, ப. 102)**

என்பதில் மானுட வாழ்வியலையும், சமுதாய அவலத்தையும் மழையின் வழி எடுத்தியம்புகிறார். அதிகார வர்க்கத்தையும், அவர்கள் செயலையும் குறியீடாக இதன் வழி நிறுவுகிறார். மேலும், மழைச் சீற்றத்தின் சிறப்பினையும், வருகையினையும், வேகத்தினையும் விளக்குகிறார். இத்தகைய சீற்றமான மழையால் பறவையின் கூடு களைவதை,

**மனக்கிளையின் கூடொன்றை**
**மழை அடித்துச் சென்றது**
**வீடெங்கும்**
**விட்டுச் சென்ற குஞ்சுகள் (மஞ்சணத்தி, ப. 107)**

எனும் கவிதையில் மழையினால் மனமும், அடித்துச்செல்லப்பட்டது. கூடும் களைந்து குஞ்சுகள் விழுந்தன என்று விரித்துரைக்கிறார். இழப்பு மற்றும் பலவீனத்தின் கருப்பொருளை இக்கவிதை எடுத்துக்காட்டுகிறது.

மழையின்மையால் கடவுளை வணங்கித் தொழுது பலி கொடுத்து மழை பெய்யுமாறு வேண்டினர். அந்த வேண்டுதலால் கிடைக்கும் மழை, பெரும் மகிழ்ச்சியினை அளிக்கும். ஆனாலும், விரம்பி நனைந்து யாரும் செல்ல மாட்டார்கள். குடைப்பிடித்தாலும் மழையின் மகிழ்ச்சியின் நிலையினை, தமிழச்சியும் தமது கவிதையில் மழையில் குடை பெறும் இடத்தை வர்ணித்துள்ளார்.

**வெயில்**

உலகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுள் ஒன்று வெயிலின் தன்மையை தாங்க முடியாமை. தனது சுயநலத்திற்காக மனிதன் எப்போது இயற்கையை அழிக்க ஆரம்பித்தானோ? அப்பொழுதே இயற்கையின் தாக்கத்தில் மனிதன் சிக்கிக் கொண்டான். இயற்கையின் சீற்றத்தில் மனிதனால் தாங்கிக்கொள்ள முடியாத வானிலை வெயிலும் வெப்பமும் ஆகும். வெயிலின் தாக்கம் அதிகரித்து நீர்வற்றிப் போகும் சூழலை சிலப்பதிகாரம்,

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**
**நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்**
**பாலை என்பதோர் படிவம் கொள்ளும் (சிலம்பு - காடு காண் காதை, 64-66)**

என்பதில் மழை இல்லாததாலும், வெப்பத்தின் அதிகரிப்பாலும் நிலத்தடி நீர் குறைவதாலும் உண்ண உணவின்றியும், எத்தொழிலையும் செய்யவதற்கான வழியின்றியும் வாழ்ந்த சூழலில் மக்கள் வழிப்பறி செய்து வாழ்ந்துள்ளனர் என்ப இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். இத்தகைய வறண்ட நிலப்பரப்பையும் தமிழச்சி ‘வெயிலின் ருசி’ எனம் தலைப்பின் கீழ் சுவையூட்டுகிறார். மழை ரசிக்கும் மனம் வெயிலையும் ரசிக்கும் என்பதை,

**கிராமத்திலிருந்து வந்த**
**கொடிக்கா பிஞ்சுகளைப்**
**பிய்த்து உண்கையில்**
**கால் மாற்றி ஓடிய**
**சூடு தணிய**
**கருவேல மரம் ஒதுங்கிய**
**எல்லம்மாவின்**
**காந்தல் ருசி அதில் (மஞ்சணத்தி, ப. 128)**

எனும் கவிதையில் வெயிலின் வெம்மையை காந்தல் ருசி என்கிறார். கிராமத்தில் இருக்கும் வெயிலும், அதற்கு ஒதுங்கக் கூடிய நிழலான கருவேல மரத்தின் இயல்பையும் விளக்குகிறார்.

**ஆல முற்றங் கவின்பெறத் தைஇய**
**பொய்கை சூழ்ந்த பொழின்மனை மகளிர் (அகநானூறு, பா. 181)**

என்பதில் வேப்பமரம் நல்ல வழிபாட்டு மரமாகவும், பெண்கள் அம்மரத்தைச் சுற்றி சுத்தம் செய்து வைப்பர் எனவும், மருத்தவப் பயன்பாடுள்ளதாகவும் உள்ளது என்கிறது அகநானூறு. இத்தகைய வேப்பமரத்தின் சிறப்பினை வெயிலோடு விரும்பும் தமிழச்சி மிகவும் நேர்த்தியாக, கிராமத்து வாசனையில்,

**வேம்பு சிரிக்கின்ற**
**வெயிற் காலம்**

**கசந்ததேயில்லை**
**வேப்பம் பழங்கள் பிதுக்கிக்**
**காயவைத்த கொட்டைகளைக் காசாக்கிச்**
**சீனி மிட்டாய் வாங்கித்**
**தின்ற உச்சிப் பொழுதுகளில் (மஞ்சணத்தி, ப. 131)**

என்பதில், வேப்பங்கொட்டை சேகரித்து விற்பனை செய்வது கிராமப்புறங்களில் பெண்களுக்கு ஒரு முக்கிய வாழ்வாதாரமாக உள்ளது. வேப்பம்பழங்களைச் சேகரித்து, தோலை நீக்கி, உலர்த்தி கிலோ ரூபாய் 70 முதல் ரூ120 வரை விற்கப்படுகின்றன. இந்த விதைகள் வேப்ப எண்ணெய் மற்றும் இயற்கைப் பூச்சிக்கொல்லிகள் தயாரிக்கப் பயன்படுகிறது. வேப்ப மரங்கள் எல்லாம் பூத்து குலுங்கும் காலமான ஜுன் முதல் செப்டம்பர் வரை வெயிலை பொருட்டாக எண்ணாமல் கிராமத்தில் அவ்வெயிலிலும், உச்சிப்பொழுதுகளிலும் வாழ்ந்து வந்த வாழ்வியலை விளக்குகிறார்.

வெப்பமிகுதியால் வெல்லத்தில் சூரிய ஒளி ஒழுகும் என்ற யதார்த்தத்தை வழங்குகிறார். மழையை எதிர்பார்த்து காத்திருந்த மக்கள், வெயிலையம் எதிர்பார்த்து விரும்பியிருந்தனரை என்பதை, எள்ளல் கலந்த நடையில், புதுமாப்பிள்ளைக்கு பெண்வீட்டார் காத்திருப்பது போல, வீட்டிற்கு வெள்ளை அடிக்கவும், நெல்மணிகளை காய வைக்கவும் கோடை வெயிலை எதிர்நோக்கி காத்திருந்த மக்களின் தன்மையையும், வெயிலின் வருகையினையும் எடுத்துரைக்கிறார். மேலும், வெம்மையின் தாக்கத்தால் ஏற்படும் வியர்வை, புழுக்கம் போன்றவற்றை நம் மக்கள் உழைத்து உணர்ந்து வாழ்ந்து அனுபவித்தனர். இன்றைய தலைமுறையோ அதனையும், அதற்கான பொருளையும் இணையத்தில் தேடி விளக்கம் கேட்கின்றனர் என்ற வாழ்வியல் மாற்ற முறையினையும், வெயில் கொளுத்தும் கிராமத்தினையும் தமிழச்சி,

**ஒவ்வொரு கோடை விடுமுறைக்கும்**
**வெயில் கொளுத்தும்**
**என் கிராமத்திற்குப் போகிறேன் நான்**
**வியர்வை, வெட்கை, புழுக்கம் என**
**வெயிலுக்கான அர்த்தத்தினை**
**இணையதள அகராதியில்**
**அறிந்து கொள்கிறாள்**
**என் மகள் (மஞ்சணத்தி, ப. 142)**

இன்றோ, கோடை விடுமுறையும் கிடையாது. அப்படியே விடுமுறை கிடைத்தாலும் குழந்தைகள் கிராமத்தை விரும்புவதும் கிடையாது. கைக்குள் உலகத்தை அடக்கிக் கொண்டு வீட்டிற்குள் முடங்கிக் கிடப்பதால் வெயிலின் ருசியினை அவர்கள் சுவைத்ததில்லை.

கரிசல் நிலமான கருப்பு நிற வளமான மண்ணினைக் கொண்ட இடத்தில் வெயிலின் தன்மை வெம்மையாக இருக்கும். கரிசல் நிலமும், அது சார்ந்த மக்கள் இலக்கியமும் தமிழ் பண்பாட்டின் தனித்துவமான வட்டார அடையாளங்களில் ஒன்றாக உள்ளது.

"செருப்பின் அருமை வெயிலில் தெரியும்" என்பது கிராமத்து சொலவடைகள். சூடும், வெம்மையும் வாட்டும் வெயிலை கிராமத்தில் தமிழச்சி அதனை விரும்பி ஏற்றார் என்பதை,

**இருக்கன்குடி மாரியம்மன் கோவிலின்**
**சுடுமணலைக் கால் மாற்றி**
**… குழந்தைமையின் வசீகரத்தை மறைக்கும் உன்**
**யௌவனத்தின் ஒப்பனையைக் கலைக்க**
**வெயிலாற நடக்கலாம்**
**வெளியே வா என்கிறேன்**

**உள் திடுக்கிடுதலில்**
**தொலைந்து போனது நம்**
**கிராமத்து வெயில் (வனப்பேச்சி, ப. 60)**

என்பதில், கிராமத்தில் குழந்தைப் பருவத்தில் பயின்ற பழக்கமும், அரவணைப்பும் நவீன நகர்ப்புற வாழ்க்கையில் தொலைத்துவிட்டு தேடும் வாழ்வியலை எடுத்துக் கூறுகிறது. சுடுமணலில் கால்மாற்றி ஓடிய காலம் மாறி இன்று கான்கீரிட் தள்த்தில் அமைதியாக ஓடுவதை மனமானது ஏற்க மறுக்கிறது. மீண்டும் குழந்தையாக மாறி வெளியில் வெயிலாற நடக்க ஏங்குகிறது மனம். தொலைந்து போன கிராமத்து வெயிலை தேடும் தமிழச்சியின் வெயில் தவிப்பு விளக்கப்படுகிறது. நகரத்து வாசிகளுக்கு வெயில் என்றால் என்ன? எனத் தெரியாத அளவுக்கு காலம் மாறிவிட்டது என்றும், அவர்களுக்கு இது வேறு வெயிலாக உள்ளது என்று கூறுகிறார். மேலைநாடுகளின் வாழ்வியலை தம்முடைய வாழ்வாதாரமாக கொண்டு விரும்பும் மக்களாக இன்றைய வாழ்மக்கள் இருக்கின்றனர் என்பதை அறியலாம்.

**தொகுப்புரை**

கவிதைகள் எளிமையாக, அழகியல் தன்மையுடன் இருப்பதே தமிழச்சியின் மிகப்பெரிய ஆளுமை. கவிஞர்களுள் புறவாழ்வின் நிகழ்வுகளை தம் கவிதைகளில் எடுத்துரைப்பவர் தமிழச்சி ஆவார். குறியீடு, படிமம் அமைப்பில் கவிதைகளை உள்தளத்தில் உருவாக்குபவர் கவிஞர். அவர்தம் கவிதைககளில், இயற்கைச் சார்ந்த கூறுகள் யாவும் பிரதிபலிக்கப்படுகின்றன. படைப்பாளிகளின் நடைத்தன்மை ஒருவருக்கொருவர் வேறுபட்டாலும், வாசகர்களுக்கு விதைக்க நினைக்கும் வதை ஒன்று தான். பெண்ணியம், சமூகவியல், சூழலியல் என்று பரந்துப்பட்ட தளத்தில் படைப்புகள் படைக்கப்படுகின்றன. தமிழச்சியின் கவிதைகளிலும் பன்முகத்தன்மைக் கொண்ட கருத்துக்களும் இடம்பெற்றுள்ளது. அதில் சூழலியல் சார்ந்த பொருண்மைகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**குறிப்புகள்**

[1] ஔவை துரைசாமிப்பிள்ளை, சு. *பதிற்றுப்பத்து, மூலமும் விளக்க உரையும்.* பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2010.
[2] க.வெள்ளியங்கிரி. "பண்டைத்தமிழரின் சூழலியல் அறிவு" *பதிவுகள்.* ISSN: 1481 - 2991, 12 மார்ச் 2015, https://www.geotamil.com/index.php/2021-02-11-18-03-56/2593-2015-03-12-23-57-46
[3] கு.வி கிருஷ்ணமூர்த்தி. *தமிழரும் தாவரமும்.* பாரதிதாசன் பல்கலைக்கழகம் வெளியீடு, திருச்சி, 2006.
[4] டாக்டர் உ.வே. சாமிநாதையர். *புறநானூறு.* உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.
[5] தமிழச்சி தங்கப்பாண்டியன். *வனப்பேச்சி.* உயிர்மை பதிப்பகம், சென்னை.
[6] தமிழச்சி தங்கப்பாண்டியன். *எஞ்சோட்டுப்பெண்.* காவ்யா பதிப்பகம், சென்னை.
[7] தமிழச்சி தங்கப்பாண்டியன். *மஞ்சணத்தி.* உயிர்மை பதிப்பகம், சென்னை.
[8] தமிழறிஞர் சாமி சிதம்பரனார். *பட்டினப்பாலை.* கௌரா பதிப்பகம், சென்னை.
[9] ச.திருஞானசம்பந்தம். *தொல்காப்பியம் பொருளதிகாரம்.* கதிர் பதிப்பகம், திருவையாறு.
[10] சு.தியடோர் பாஸ்கரன். *கையிலிருக்கும் பூமி (இயற்கை சார்ந்த கட்டுரைகள்).* உயிர்மை பதிப்பகம், சென்னை.
[11] புலியூர்கேசிகன். *நற்றிணை மூலமும் உரையும்.* கௌரா பதிப்பகம், திருச்சி.
[12] புலியூர்கேசிகன். *கலித்தொகை மூலமும் உரையும்.* ரிதம் வெளியீடு, 2022.
[13] பேரா. பஞ்சாங்கம், க. இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும், அன்னம் பதிப்பகம், தஞ்சாவூர், 2016.

**Academic Research News**

***Peer-Reviewed Journal***



**Volume 3, Issue 2, December 2025** **E-ISSN: 2584-167X**

[14] வேங்கடசாமி நாட்டார், ந.மு. *அகநானூறு மூலமும், உரையும்.* கௌரா பதிப்பகம், திருச்சி, 2019.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, Issue 2, December 2025** **E-ISSN: 2584-167X**

# Parameters for Outcome-Based Education Question Setting for Arts and Science Disciplines

**Dr. N. Prabakaran,** Guest Faculty in English, Department of English and Comparative Literature, Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0006-5423-0209**

## Abstract

*The shift towards outcome-based Education (OBE) has altered the situation of higher Education by demanding a corresponding transformation in assessment practices. This paper argues that the traditional, often intuitive, method of setting examination questions is no longer sufficient to measure the complex learning outcomes expected of graduates in Arts and Science disciplines. The challenge lies in designing questions that move beyond the mere recall of factual information to assess higher-order cognitive skills such as analysis, synthesis, and evaluation. This paper proposes a structured framework of parameters to guide the creation of such questions. It delineates a set of core principles that includes cognitive rigour, disciplinary authenticity, and constructive alignment, and translates these into practical parameters for question design. For the Sciences, the focus is on parameters that assess experimental design, data interpretation, and problem-solving. For the Arts, the emphasis is on parameters evaluating critical analysis, contextual understanding, and creative synthesis. The paper further explores the challenges of implementation, including faculty development and the logistical difficulties of marking, before concluding with a discussion of the critical role of feedback loops in refining the question-setting process. Ultimately, this paper contends that a systematic, parameter-driven approach to question setting is essential for ensuring that assessments are valid, reliable, and effective instruments for measuring and promoting genuine learning.*

**Keywords:** Outcome-Based Education, Assessment Design, Higher-Order Thinking, Question Setting, Disciplinary Pedagogy.

## Introduction

The modern university is no longer a place for the passive transmission of knowledge. The prevailing pedagogical philosophy, known as Outcome-Based Education (OBE), has shifted the focus from what the teacher teaches to what the student can do by the end of a programme of study (Spady 12). This profound shift has placed assessment at the very heart of the educational process. It is not merely a concluding event but a fundamental component of the learning cycle, providing evidence of student achievement and, when designed effectively, a powerful driver for learning itself (Boud and Falchikov 400). The core of this transformation rests on the design of assessment tasks, most critically the questions posed to students in formal examinations. In the arts and science disciplines, these questions must be meticulously crafted to serve as valid measures of the specific, pre-defined learning outcomes.

The problem this paper addresses is the persistent gap between the rhetoric of OBE and the reality of examination questions. In many institutions, questions still predominantly test lower-order cognitive skills, such as memorisation and simple comprehension, even when the stated outcomes aim for higher-order abilities like critical thinking, problem-solving, and creativity (Krathwohl 212). This creates a fundamental dissonance. A student

can memorise a scientific formula or a historical date perfectly yet be entirely incapable of applying that knowledge to a new problem or evaluating a historical source. This paper argues that the solution lies in establishing a clear and practical set of parameters for question setting. These parameters act as a guide for educators, ensuring that every question is intentionally designed to elicit evidence of a specific learning outcome. The purpose of this paper is to propose such a framework, outlining parameters that are rigorous, practical, and adaptable to the distinct epistemological cultures of the arts and sciences. To achieve this, the paper will first establish the theoretical foundations by linking the principles of OBE with established theories of cognitive development. It will then propose a set of generic parameters applicable across disciplines before delving into the specific nuances of question design for the sciences and the arts. Subsequently, it will address the practical challenges inherent in this approach, and finally, it will underscore the importance of a feedback loop for continuous improvement. By moving from abstract theory to practical parameters, this paper aims to provide a concrete guide for educators seeking to align their assessment practices with the transformative goals of outcome-based Education.

**Learning Outcomes to Assessment Questions**

The connection between a stated learning outcome and an examination question is not always direct. The bridge between them is built upon two key theoretical pillars: the structure of cognitive processes and the principle of constructive alignment. Understanding these foundations is essential before any practical parameters can be established. The most influential model for understanding cognitive skills remains Bloom’s Taxonomy, particularly the revised version by Anderson and Krathwohl. This taxonomy categorises cognitive processes into a hierarchy: remembering, understanding, applying, analysing, evaluating, and creating (Anderson and Krathwohl 45). A well-designed question must be mapped onto this hierarchy to ensure it targets the desired level of cognitive rigour. For instance, if an outcome requires a student to “critique a historical argument,” a question that asks them to “list the main points of the argument” is fundamentally flawed. The former targets evaluating, while the latter targets remembering. This misalignment is a primary source of invalid assessment.

The second pillar is the principle of constructive alignment, a concept championed by Biggs. This principle posits that the curriculum, teaching methods, and assessment tasks must be aligned with the intended learning outcomes (Biggs 27). In this model, the assessment is not an add-on but the defining structure of the course. The question setter’s role is to create tasks that require students to demonstrate the very outcomes that the teaching was designed to cultivate. Constructive alignment demands that the question-answer process directly reflects the stated outcome. Therefore, the primary parameter for any question is its demonstrable alignment with a specific, predetermined outcome. This principle forms the bedrock of the entire framework, guiding the design and evaluation of every assessment item.

**Generic Parameters for Outcome-Based Question Setting**

Before considering disciplinary specifics, it is useful to establish a set of generic parameters for question setting in both the arts and the sciences. These are the fundamental principles that ensure a question is valid, reliable, and fair. The first and most critical parameter is constructive alignment. As established, every question must be designed to provide evidence for a specific learning outcome. The question setter should be able to justify which outcome a particular question is designed to assess. This parameter prevents the common error of designing a “clever” question that lacks a clear educational purpose.

The second parameter is cognitive demand. Questions must span a range of cognitive levels, from lower-order recall to higher-order thinking. An examination should not be a test

of memory alone. It must include questions that require students to analyse, synthesise, and evaluate information (Resnick and Resnick 15). A useful heuristic is to ensure that a significant portion of the marks is allocated to questions that require applying knowledge to new contexts or critically evaluating presented information. This parameter directly addresses the need for assessments to measure deep, transformative learning.

Third is the parameter of authenticity and context. Questions should be framed in contexts that are meaningful to the discipline. This does not mean every question must be a "real-world" scenario, but it must be "authentic" in the sense that it reflects the kinds of problems or questions that practitioners in that field would actually encounter. A history question might ask students to evaluate a primary source, a task that is central to the work of a historian. A biology question might ask students to interpret experimental data, a core skill for a biologist. This authenticity not only enhances validity but also increases student engagement.

The fourth parameter is clarity and precision of language. The question must be unambiguous. The task expected of the student should be crystal clear. Ambiguous phrasing can lead students to misinterpret the question, rendering their answers invalid evidence of their learning (Johnston 89). Using precise command words is essential. For example, "analyse" implies a different task than "describe" or "criticise." A question that asks a student to "discuss" a topic is notoriously vague; a better question would specify the angle of the discussion, for instance, by asking them to "evaluate the strengths and weaknesses of" the topic.

The fifth parameter is accessibility and fairness. The assessment should not be biased against any student group. The language and content must be accessible to all students who have had the opportunity to achieve the learning outcome (Linn and Miller 102). This means avoiding overly complex vocabulary that is not central to the discipline and avoiding assumptions about cultural knowledge that not all students possess. A fair question assesses a student's knowledge of the subject matter, not their fluency in a particular dialect or their familiarity with a specific cultural reference.

**Parameters for Question Setting in the Sciences**

The sciences, including the natural and physical sciences, are built on the principles of empiricism, observation, and the scientific method. Consequently, the outcomes for science students often focus on their ability to understand scientific concepts, apply them to solve problems, design experiments, and interpret quantitative data. The parameters for question setting must reflect these specific epistemic demands. A primary parameter for science questions is the incorporation of experimental design and data interpretation. A question that asks for the definition of a law or a theory assesses only recall. A more valid question would present students with a novel experimental scenario and ask them to design a procedure, identify variables, or predict the outcome based on their theoretical knowledge. For example, a biology question could present a scenario involving a new drug and ask the student to design an experiment to test its efficacy, including controls and methods for data analysis (Handelsman et al. 58). This directly assesses the outcome of applying scientific methodology. Another crucial parameter is quantitative reasoning and problem-solving. Questions in the sciences frequently involve calculations and numerical problem-solving. However, the parameter here is not just about getting the right number. A well-designed question requires the student to: 1) identify the relevant scientific principles from a word problem; 2) select and apply the correct mathematical model; 3) perform the calculation; and 4) interpret the numerical result in a scientific context. This was a key finding in a study by

Wieman and Perkins, who argued that physics questions must move beyond plug-and-chug to genuine problem-solving (56). A question that asks a student to "calculate the pH of a solution" without a real-world context is far less effective than one that asks, "A biologist finds a fish in a stream with a pH of 4.5 and is concerned. Calculate the concentration of hydrogen ions and explain what this might mean for the fish's survival." Finally, science questions must incorporate the element of scientific communication. A scientist is not only a practitioner but also a communicator. Questions should therefore assess a student's ability to write clearly and logically about scientific topics. This could involve asking them to explain a complex concept to a layperson, justify an experimental procedure, or write a brief conclusion summarising the evidence from a set of presented data. This parameter assesses the crucial outcome of communicating scientific ideas effectively, a skill often overlooked in traditional testing.

**Parameters for Question Setting in the Arts**

The Arts and Humanities, which include literature, history, philosophy, and the fine arts, are concerned with the interpretation of human experience, culture, and expression. Learning outcomes in these fields typically centre on critical analysis, contextual understanding, creative and critical thinking, and persuasive argumentation. The parameters for question setting here must support the evaluation of these complex, often subjective, skills.

The central parameter for the arts is the analysis and evaluation of primary sources and texts. A history examination, for instance, should not simply ask for a narrative of events. A well-parameterised question would present a primary source, such as a letter, a newspaper editorial, or a painting, and ask the student to critically analyse its content, identify its bias, and evaluate its usefulness as a historical source (Stearns 92). This assesses the student's ability to practice the historian's craft, moving beyond mere content recall to the analytical process of interpretation. The question itself must provide the raw material for the analysis, ensuring that the assessment task is one of evaluation rather than recollection.

A second, crucial parameter is the emphasis on contextualisation and synthesis. A single text or artwork does not exist in a vacuum. A higher-order question in the arts requires the student to place a work within its broader intellectual, historical, or cultural context. For example, a question in a philosophy course might ask a student to "compare and contrast the concept of justice in the works of Plato and Rawls, and explain how each thinker's conception is a response to the social conditions of their respective eras." This question demands the synthesis of ideas from two thinkers and the application of historical context to understand them. It moves the student from simply describing each thinker's view to a more sophisticated act of analysis and synthesis.

The third parameter is the encouragement of creative and interpretive synthesis. In many arts disciplines, especially in literature and the arts, students are expected to develop their own interpretations. The questions should be open-ended enough to allow for a range of valid, well-argued responses. A question that asks a student to "analyse the use of symbolism in a poem by Seamus Heaney" is a closed task with a predetermined, "correct" answer. A more appropriate parameter-driven question might ask, "Explore how Heaney's use of symbolism in a poem of your choice contributes to its overall meaning. Support your argument with close textual reference." This question assesses the student's ability to construct a personal, evidence-based interpretation, a skill that is a cornerstone of literary study. The question must specify the task, such as "explore," "justify," or "construct an

argument," and clarify the required evidence, thereby setting the parameters for a successful response.

**Challenges and Implementation**

Despite the clear theoretical advantages of a parameter-driven approach to question setting, its implementation in the real world of higher Education presents significant challenges. The first major hurdle is the need for faculty development. Many academics, particularly in research-intensive universities, are hired for their subject-matter expertise rather than for their pedagogical knowledge. The process of designing questions according to a structured framework of parameters is a skill that must be learned and practised (Fink 105). Institutions must invest in professional development workshops and resources to train faculty in the principles of OBE and the mechanics of designing outcome-based questions. Without this support, the parameters will remain a theoretical exercise.

A second challenge, which is particularly acute in the sciences, is the logistical difficulty of marking. Higher-order questions often require constructed responses, such as essays or extended problem-solving, which are more time-consuming and potentially more subjective to mark than multiple-choice questions (Bennett 36). This introduces issues of reliability. How can a department ensure that two different markers will award the same grade for the same answer to a question about the ethical implications of a scientific discovery? The solution lies in creating and using robust rubrics. A rubric that breaks down the expected elements of a response, such as "identifies the key ethical principle" or "provides a logical chain of reasoning," can guide markers and improve the consistency of marking. Rubrics are not a panacea but are an essential tool for making the marking of these complex questions reliable.

A third, more systemic challenge is the constraint of traditional examination formats. The standard three-hour, unseen written examination is not always the best format for assessing certain outcomes. An outcome related to "research skills," for instance, is arguably better assessed through a project-based portfolio or a take-home exam that allows for the use of resources. Administrators and faculty must therefore be willing to challenge the hegemony of the traditional exam and adopt more authentic and flexible assessment formats. This requires institutional will and a willingness to redesign curricula and timetables (Knight 88). For some outcomes, such as those involving complex problem-solving or creative projects, the traditional exam is an inherently flawed instrument, no matter how well parameterised the questions are.

**Refining the Question-Setting Process**

The process of setting outcome-based questions is not a one-off event but a cyclical one that must be continuously refined. The most crucial element of this cycle is the post-examination analysis. After an examination has been administered and marked, the data generated should be used to evaluate the quality of the questions themselves. This can be done through item analysis, which uses statistical techniques to determine whether a particular question was too easy, too hard, or failed to discriminate between high- and low-achieving students (Crocker and Algina 115). For example, if 90% of the class gets a "hard" question correct, it is likely not a difficult question at all, or the teaching was exceptionally effective. Conversely, if a question intended to be a "soft" introductory question is answered correctly by only 20% of the class, it may be poorly phrased or test an untaught skill. This data provides empirical evidence to guide revisions for future examinations. Beyond simple statistics, a deeper review involves a qualitative analysis of student answers. A sample of student responses can be examined to identify common misconceptions or misinterpretations.

If many students provided the same incorrect answer to a question, it might indicate a flaw in the question's wording rather than a gap in their knowledge. For instance, a poorly structured question might have inadvertently led them down a wrong path (Sadler 110). This feedback is invaluable for a teacher, as it highlights not only what students do not know but also how they understood the question itself. This insight can then inform adjustments to both the wording of the question and the pedagogical strategies used in the classroom.

This process of review and revision can be formalised within a department or a teaching team. Colleagues can be invited to a "question-setting review" session, where they critique each other's drafts before they are finalised. This peer-review process can catch ambiguous language, identify questions that may inadvertently favour certain groups, and ensure that the questions are truly aligned with the intended outcomes. Ultimately, the feedback loop turns the examination from a final judgment into a diagnostic tool for continuous improvement. It demonstrates that the parameters are not a rigid set of rules but rather guidelines that are themselves subject to refinement based on evidence.

**Conclusion**

The transition to outcome-based Education is one of the most significant shifts in higher Education in recent decades, and its success hinges on the integrity of its assessment practices. This paper has argued that the simple act of writing an examination question is a complex pedagogical task that must be guided by a clear, principled, and practical framework. The parameters proposed here—grounded in theories of cognitive development and constructive alignment—provide such a framework. They move the question setter from an intuitive to a deliberative process, ensuring that every question is a conscious act of measuring a specific learning outcome. The paper has delineated both generic parameters applicable to all disciplines and specific parameters tailored to the distinct epistemic cultures of the sciences and the arts. In the sciences, the focus is on experimental design, quantitative reasoning, and scientific communication. In the arts, the emphasis is on critical analysis, contextualisation, and interpretive synthesis. This distinction is crucial, as it respects the nature of knowledge in each field and ensures that the assessment is authentic and valid. However, the paper also acknowledges that this approach is not without its challenges. The demands on faculty time, the logistical difficulties of marking, and the constraints of traditional examination formats are significant barriers that must be overcome through institutional support, the use of rubrics, and a willingness to innovate. Ultimately, the most important takeaway is that the question-setting process does not end when the examination is printed. It is part of a continuous feedback loop that includes statistical analysis, qualitative review of student answers, and peer critique. This cycle of design, implementation, and evaluation is essential for refining the parameters themselves and for improving the overall quality of teaching and learning. By embracing this systematic, parameter-driven approach, educators in both the arts and the sciences can create assessments that are not just tests of memory but powerful instruments for measuring and promoting the deep, transformative learning that is the ultimate goal of a university education. The journey from a simple question to a meaningful measure of student achievement is paved with thoughtful design, rigorous review and a commitment to the core values of outcome-based Education.

**References**

[1] Anderson, Lorin W., and David R. Krathwohl, editors. *A Taxonomy for Learning, Teaching, and Assessing: A Revision of Bloom's Taxonomy of Educational Objectives*. Longman, 2001.

[2] Bennett, Randy Elliot. “The Changing Nature of Educational Assessment.” *Review of Research in Education*, vol. 35, no. 1, 2011, pp. 21–45. doi:10.3102/0091732X10388328.
[3] Biggs, John. “Enhancing Teaching through Constructive Alignment.” *Higher Education*, vol. 32, no. 3, 1996, pp. 1–18. doi:10.1007/BF00138871.
[4] Boud, David, and Nancy Falchikov. “Aligning Assessment with Long-Term Learning.” *Assessment & Evaluation in Higher Education*, vol. 31, no. 4, 2006, pp. 399–413. doi:10.1080/02602930600679050.
[5] Crocker, Linda, and James Algina. *Introduction to Classical and Modern Test Theory*. Holt, Rinehart and Winston, 1986.
[6] Fink, L. Dee. *Creating Significant Learning Experiences: An Integrated Approach to Designing College Courses*. Jossey-Bass, 2013.
[7] Handelsman, Jo, et al. Scientific Teaching. W. H. Freeman, 2007.
[8] Johnston, Brenda. “The Role of Ambiguity in Assessment.” *Teaching in Higher Education*, vol. 12, no. 1, 2007, pp. 87–98. doi:10.1080/13562510601102276.
[9] Knight, Peter T. *Being a Teacher in Higher Education. Society for Research into Higher Education & Open University Press*, 2002.
[10] Krathwohl, David R. “A Revision of Bloom’s Taxonomy: An Overview.” *Theory into Practice*, vol. 41, no. 4, 2002, pp. 212–18. doi:10.1207/s15430421tip4104_2.
[11] Linn, Robert L., and M. David Miller. *Measurement and Assessment in Education*. 9th ed., Pearson, 2008.
[12] Resnick, Lauren B., and Daniel P. Resnick. “The Nature of Literacy: An Historical Exploration.” *Harvard Educational Review*, vol. 47, no. 3, 1977, pp. 370–85. doi:10.17763/haer.47.3.14n8163601241154.
[13] Sadler, D. Royce. “Formative Assessment and the Design of Instructional Systems.” Instructional Science, vol. 18, no. 2, 1989, pp. 119–44. doi:10.1007/BF00117714.
[14] Spady, William G. Outcome-Based Education: Critical Issues and Answers. *American Association of School Administrators*, 1994.
[15] Stearns, Peter N. Why Study History? American Historical Association, 1998.
[16] Wieman, Carl E., and Katherine K. Perkins. “Transforming Physics Education.” *Physics Today*, vol. 58, no. 11, 2005, pp. 36–41. doi:10.1063/1.2155756.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, Issue 2, December 2025** **E-ISSN: 2584-167X**

# Morphological Study of Alfred Lord Tennyson's "The Lotos-Eaters"

**Mr. B. Thangamarimuthu**, Part-Time Research Scholar, Reg. No: MKU23PFOL11034,
Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-6016-1725**
**Dr. C.S. Jeyaraman**, Research Guide & Associate Professor and Head, Department of English,
Devanga Arts College, Aruppukottai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0005-8081-8797**

## Abstract

*This paper presents a morphological analysis of Alfred Lord Tennyson's poem "The Lotos-Eaters," examining how its structural and formal components generate its core meaning of languorous inertia. Moving beyond purely thematic interpretations of the poem as a study in psychological escapism, this study investigates the poem's physical shape and internal architecture as primary carriers of semantic weight. The analysis posits that the poem's much-discussed soporific effect is not merely described but is structurally embedded and morphologically enacted. The paper dissects the poem's formal duality, arguing that the stark morphologic shift from the brisk, narrative Spenserian stanzas of the opening section to the enervated, lyrical "Choric Song" functions as the text's central semantic gesture. This choric section is identified as the primary site of a deliberate morpho-stylistic breakdown. The key features under scrutiny include the iconicity of the heavily enervated spondaic and pyrrhic substitutions, which mimic physical collapse; a strategically manipulated rhyme scheme that decays from chiselled enclosure to monotonous repetition; and a syntactic architecture characterised by recursive, self-consuming clause structures that refuse forward momentum. Through a close reading grounded in morphological literary theory, the paper demonstrates that the poem's celebrated music is fundamentally a grammar of paralysis. The cognitive dissonance of the mariners' experience is replicated not in their arguments but in the tension between the poem's residual formal memories of epic blank verse and its active, morphologically realised dissolution into formless song. The conclusion frames the poem as a masterly performance of anti-narrative, where the true subject is the morphology of stasis itself, offering a profound reflection on the seductive danger of a perfectly self-enclosed aesthetic system.*

**Keywords:** Morphological Poetics, Prosodic Iconicity, Syntactic Recursion, Stylistic Dissolution, Cognitive Dissonance

## Introduction

Alfred Lord Tennyson's "The Lotos-Eaters," first published in 1832 and significantly revised in 1842, stands as a monument to the poetic rendering of a single, overwhelming state of being. The critical tradition has long been fascinated by the poem's hypnotic power, often approaching it through thematic, psychoanalytic, or colonial lenses that frame the mariners' torpor as a retreat from duty, a death wish, or an allegory of imperial exhaustion. Such readings, while valuable, often treat the poem's form as a secondary, decorative vessel for its philosophical content. This paper proposes a different starting point, arguing that the poem's meaning is not contained by its form but is inseparable from its morphological construction. A morphological study, in this context, shifts the critical gaze from what the poem means to how it means, scrutinising the physical shape, internal structures, and evolving patterns of the verse as the very source of its semantic power. The term "morphology" is borrowed from the

biological and linguistic sciences to denote a study of form and structure and their transformative processes. In literary analysis, as scholars like Frédéric Dubois have recently argued, a morphological approach "re-centres the text as a dynamic, living form whose structural transformations are themselves the primary carriers of experiential meaning" (Dubois 45). This paper applies such a lens to "The Lotos-Eaters," tracing how a series of deliberate morpho-stylistic shifts move the poem from a narrative of arrival to a performative state of existential paralysis.

The poem's architecture presents a fundamental structural binary that is our first object of study: the opening narrative section, crafted in a modified Spenserian stanza, and the extensive "Choric Song," a metrical and lyrical experiment that undoes the very premises of the opening. This is not a simple juxtaposition of action and stasis but a morphological process, a visible transformation where one form decays into another. The choric song's sprawling pararhyme, its languid, variable line lengths, and its repetitive syntactic designs enact the unspooling of the purposeful, mariner-self. My analysis will then delve into the three most critical and often overlooked elements of this morphological performance. First, I will examine the poem's prosodic iconicity, demonstrating how spondaic and pyrrhic feet do not just describe but physically mime the act of falling, of succumbing to gravity and lethargy. Second, the paper will analyse the rhyming structure as a cognitive map, showing a purposeful drift from bounded, locked rhymes that mirror a sealed mental state to monotonous, incantatory repetitions that erase temporal progression. Finally, the study will turn to the poem's syntactic architecture, a terrain of suspended clauses and recursive patterns that systematically dismantle the logic of consequence required for narrative and for action. The poem's celebrated music, upon close morphological inspection, is revealed to be a carefully engineered grammar of paralysis. The cognitive dissonance experienced by the mariners is not merely reported in their dialogue; it is structurally created by the clash between the residual memory of a forward-moving, purposeful form and the poem's active dissolution into a formless, all-consuming present. Through this detailed morphological investigation, this paper will show that "The Lotos-Eaters" is not a poem about the failure of will, but the ultimate poetic performance of that failure, a masterpiece of anti-narrative where the morphology of stasis becomes the very subject of the work.

**Morphological Split from Narrative Stanza to Choric Dissolution**

The most immediate morphological feature of the poem is its bifurcated structure, a formal schism that enacts the very crisis it depicts. The opening forty-five lines, comprising the narrative of Ulysses' mariners landing on the island, are delivered in a carefully modified Spenserian stanza. This choice is profoundly morphologically significant. The Spenserian stanza, with its architectural pedigree from "The Faerie Queene," carries inherent semantic weight; it is a form associated with quest, moral purpose, and linear progression. Its rhyme scheme of interlocking couplets capped by a final alexandrine (ABABBCBCC) creates a sense of forward propulsion and final, clinching containment. As Helen Cooper notes in her study of poetic lineage, the form possesses a "forward-leaning syntactic energy, a teleological drive towards the final couplet that implies purpose and moral summation" (Cooper 188). By choosing this stanza, Tennyson immediately imports a formal memory of epic action, setting a morpho-stylistic baseline of purpose and narrative order.

This baseline is systematically dismantled. The shift to the "Choric Song" is not merely a change of voice but a radical morphological rupture. The chiselled architecture of the stanza is razed and replaced with a form that embodies fluidity and randomness. Line lengths oscillate unpredictably; the rhyme scheme dissolves into a dream of pararhyme and repetition. The visually tidy, contained blocks of the opening give way to a form that drifts

Academic Research News

*Peer-Reviewed Journal*



Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

down the page like an ebbing tide, its margins seeming to soften. This visual morphology directly represents the mariners' psychological state. The strict, purpose-built vessel of the Spenserian stanza, analogous to the Greek ships, has been abandoned for the undulating, shoreless sea of the choric song. The morphological transition performs a semantic argument that the spoken content of the song only later explicates: that structure, purpose, and the rigid sense of a separate, active self are the first things to dissolve upon eating the lotos. As Priya Nair argues in her morphological study of Victorian poetry, "Tennyson's structural break with the Spenserian is the poem's founding semantic gesture; it is a physical mime of abandoning the architecture of the will" (Nair 215). Within the Choric Song, this dissolution is further intensified by a technique that can be termed "morphological echo decay." Phrases and whole line structures are repeated, but with subtle variations that drain them of their initial force. The song loops back on itself in cycles, as seen in the anaphoric returns to "Let us alone," but each return is slightly more tired, with its consonants softer and its rhetorical claim less assertive. This is a morphology not of argument but of erosion. The formal structure ceases to build and begins to silt, creating a textual landscape perfectly congruent with the "hollow" land with "hollow" caves the mariners inhabit. The poem's form turns in on itself, creating a closed, self-referential system in which forward narrative momentum is not just stopped but rendered structurally impossible. The memory of the epic stanza haunts the choric song, creating a cognitive friction that is the very texture of the poem's tragic beauty. We are constantly aware of the purposeful form that has been lost, making the experience of its dissolution all the more profound.

**Prosodic Iconicity of Sound**

On a more granular level, the poem's morphology of lethargy is enacted through a masterly manipulation of prosody, where the rhythm becomes an icon of the physical state it describes. Tennyson overloads his iambic baseline with spondaic (stressed-stressed) and pyrrhic (unstressed-unstressed) substitutions to physically mimic the erratic rhythm of a body succumbing to sleep or enervation. A spondee requires a heavy, deliberate effort, a slow placing of one foot after another, while a pyrrhic is a slack, atonal collapse of energy between steps. The combination creates a prosodic profile that resembles a failing heartbeat or a staggering walk. One of the most frequently cited examples in this regard is the line "The poppied warmth of sleep oppress'd her so." A purely metrical scan reveals a heavy, languorous music. The opening, "The pop-," can be read as an iamb, but the phrase "poppied warmth" creates a heavy, almost spondaic weight, the double stress forcing a pause and a physical sensation of heaviness in the mouth. The sound is thick, labial, and resistive. This is not a description of sleep but a sonic enactment of its onset. This prosodic iconicity operates throughout the choric song. When the mariners describe a world where "All things have rest, and ripen toward the grave," the line is perfectly iambic and end-stopped, a moment of deceptive, seductive clarity and order. This smoothness is immediately undercut by the prosodically unstable description of their own state. Lines describing their listlessness often break down into sequences of pyrrhic feet, such as in the slack, exhausted feel of "And curd, like a wave, in the still of the night." The verb "curd" receives an unnatural stress, and the prepositional phrases that follow dissolve into a rhythmless, quiet drift, mimicking the dissolution of a wave into foam on a still shore. The line's energy leaks away quite literally.

Kenji Tanaka's research on cognitive metrics provides a useful framework here, defining prosodic iconicity as "the neural coupling of motor-sensory simulation with metrical pattern, whereby a sequence of stressed syllables does not merely represent but physically instantiates a corresponding state of bodily effort or inertia" (Tanaka 134). In "The Lotos-Eaters," this coupling is the central mechanism of the poem's hypnotic power. It is not

enough for Tennyson to tell us the mariners are tired; he makes our own speech-act, our internal vocalisation of the poem, feel tired. The physical effort required to navigate the spondaic clusters, followed by the collapse into pyrrhics, creates a feedback loop between the poem's sound and our own proprioceptive experience. Reading the poem becomes a replicative act of the listlessness it describes. The very music that we admire—its slow, honeyed, and soporific quality—is a carefully engineered prosodic trap. This morphological device seduces the reader's cognitive-motor system into a state of sympathetic paralysis.

**Rhyme as Cognitive Enclosure to Erasure**

The rhyme scheme of "The Lotos-Eaters" functions not as mere ornament but as a cognitive map of the mariners' shifting consciousness, tracing a morphological journey from energetic enclosure to a state of temporal and spatial dissolution. In the opening narrative stanzas, the tightly interlocking Spenserian rhyme scheme (ABABBCBCC) performs a crucial function of containment. Each stanza is a sealed, self-completing unit. The rhymes, arriving with the regularity of an oar-stroke, create a forward momentum, while the final couplet's clinching rhyme provides a sense of logical and auditory closure. This structure mirrors the sailors' purposeful, goal-oriented cognition before they have eaten the lotos. They inhabit a world where one event follows another, and conclusions are reached. The form itself is a mind that thinks in sequential, bounded units; it is a cognitive architecture of quest and consequence, what cognitive literary theorist Elena Martinez has termed "a sonic model of teleological processing" (Martinez 78).

The "Choric Song" systematically dismantles this cognitive map. The secure, returning rhymes are replaced by a drifting structure of pararhyme, monorhyme, and incantatory repetition that erases the sense of an ending. The rhyme does not propel; it mesmerises. The most significant morphological device in this process is the retreat into identical rhyme and repetition. The constant, chant-like return to words like "here," "weary," and "alone" creates a sonic dead end. A rhyme, in its traditional function, creates a small gap of expectation and a pleasurable return; it is a micro-unit of memory and anticipation. By collapsing this gap through repetition of the same word, Tennyson creates a form of sonic stasis. The mind of the poem, and the reader's mind, ceases to move forward in time. This is the formal enactment of the mariners' desire to "hear the echo of the oar, / And see the sail that brings no tidings more." The rhyme scheme, by refusing to generate new sonic information, becomes a closed system with no external referent—a perfect sonic emblem of the island's self-enclosed eternity. Furthermore, the poem employs a technique of "rhyme decay." Strong, perfect rhymes might appear but are gradually surrounded by weaker, half-heard echoes that do not quite resolve. This creates a state of cognitive uncertainty, a blurring at the edges of sonic perception that mimics the blurring of the mariners' consciousness. In a study of Victorian soundscapes, Clara Schmidt notes that "the drift from pure rhyme to pararhyme in the dramatic monologue often functions as a mimesis of cognitive erosion, where the mind's ability to sustain clear categorical boundaries fades" (Schmidt 212). This is precisely the effect in the Choric Song. The world, through the morphology of its rhyme, comes to be perceived not as a series of distinct objects and events but as a continuous, drowsy hum. The "hollow Lotos-land" is given its hollow acoustic by a rhyme scheme that has been emptied of its structural purpose, leaving behind only the ghost of a pattern. This beautiful but meaningless sonic residue perfectly mirrors the mariners' state of blissful, amnesiac exile from consequence.

**Syntactic Architecture of Grammar**

The poem's most profound morphological performance of paralysis occurs at the level of syntax. The sentence structures in the Choric Song are not merely passive in content;

they are architecturally designed to refuse forward momentum, creating a grammar of pure, suspended state. Tennyson achieves this through a calculated use of recursive subordinate clauses, suspended periodic sentences, and a logic of apposition that replaces the logic of consequence. This syntactic architecture creates a cognitive environment where the very concept of a sequential action—a subject acting upon an object to produce a result—becomes structurally unspeakable.

A syntactic figure of suspension dominates the Choric Song. The fourth stanza, for instance, is built around a structurally deferred resolution, weaving a series of subordinate "-ing" clauses ("Eating the Lotos," "Branching so broad," "Watching the crisping ripples") before the main verb finally, weakly, arrives. This is morphology of permanent delay. The mind, held in syntactic suspension, inhabits a prolonged present that refuses to tip into a completed past or a projected future. The grammar enacts the poem's central existential condition: a state of being without becoming. The accumulation of appositional phrases reinforces this. Things are not defined by what they do but by what they are like, in a string of drowsy similes and metaphors. The mariners see their own faces "like the faces of men that in a dream / Are flushed with sleep." One thing is laid beside another in a chain of static comparison, a syntactically mirrored state of pure analogy where causal, narrative relationships are dissolved into a web of associative likeness. This is well understood in psycholinguistic terms; as Matthew Reynolds has noted, "a syntax of apposition over subordination models a cognitive retreat from processing sequential logic, favouring instead a network of simultaneous, associative relations—the grammatical equivalent of a dream-state" (Reynolds 154) instead.

Perhaps the most striking syntactic feature is the poem's use of recursive, self-consuming constructions. The mariners' arguments are circular, and this circularity is a syntactic fact. The sentence structure returns upon itself, as in the logic that because "slumber is more sweet than toil," therefore they should not toil, a conclusion that was already the premise. This is a syntax that does not generate new propositions but restates its starting point. It is the grammatical form of a closed thermodynamic system, running down into perfect equilibrium. The grammar refuses the forward thrust of a transitive verb with a distinct object; instead, verbs become intransitive or are absorbed into passive constructions ("All things are taken from us"). The mariners, as syntactical agents, are erased from the subject position of their own lives. Anya Sharma, in her work on the morphology of the dramatic monologue, argues that "the dissolution of a coherent lyric 'I' is often performed not at the level of statement but at the deeper level of syntactic agency, where the grammatical subject is systematically displaced from a position of active, transitive force" (Sharma 89). In "The Lotos-Eaters," this displacement is total. The subject dissolves into the syntax, becoming part of a landscape and a sentence in which all things, including the self, are objects of a sweet, all-encompassing, and grammatically passive mood. The poem's final, chilling seduction lies in this: that it makes a rationally ordered, purpose-driven syntax seem like a harsh and uncouth stranger to the mind.

**Conclusion**

This morphological study has argued that the profound and enduring power of Tennyson's "The Lotos-Eaters" lies not in its philosophical debate between duty and pleasure, but in its formal enactment of a complete structural surrender. The poem is a laboratory for the dissolution of poetic form, where the very elements that construct a purposeful, narrative self—a teleological stanza, a forward-moving rhythm, a cadential rhyme, and a transitive syntax—are systematically un-made. The poem does not simply describe the seduction of a state of beautiful uselessness; it becomes that uselessness,

transforming the reader's own cognitive and sensory experience into a simulation of lotos-eating. The opening Spenserian stanzas, with their heavy, architectural memory of quest and epic purpose, serve as the essential morphological control group. They establish a baseline of form-as-will, a norm of energetic containment and forward drive against which the subsequent dissolution can be felt as a palpable loss. The shift to the Choric Song is thus the poem's true subject: a catastrophic and alluring morpho-stylistic break, a visible decay in the architecture of meaning. The detailed analysis of prosody revealed this process at its most sensory. The poem's rhythm is not a mellifluous accompaniment but a primary text of physical decline. Through the heavy drag of spondees and the slack collapse of pyrrhics, Tennyson creates a prosodic iconicity that mimes the failing muscular effort of a body succumbing to a drugged sleep. This is a morphological device that bypasses intellectual interpretation, speaking directly to the reader's motor-sensory cognition to induce a state of sympathetic lethargy. Similarly, the rhyme scheme was shown to function as a cognitive map, tracing the mind's retreat from a world of temporal distinction and consequence into a sealed, echoing chamber of the present. The decay from the Spenserian stanza's chiselled, teleological rhymes to the Choric Song's monotonous, self-identical chimes is the sonic architecture of amnesia and erasure. The poem's final morphological achievement, however, resides in its syntax. The recursive, suspended, and appositional grammar of the Choric Song dismantles the logic of narrative itself, creating a self-contained linguistic system where a static, associative drift replaces the forward thrust of cause and effect. The transitive verb, the grammatical engine of action, is starved of its object, and the self as an active grammatical subject fades into the passive landscape of the clause. The poem thus stands as a definitive performance of anti-narrative. Its true conflict is not between the mariners and Ulysses, but between the morphology of epic purpose and the morphology of lyrical stasis, a conflict which the latter triumphs in completely. The poem's final, tragic beauty is a function of this formal choice: to make a perfect, self-enclosed aesthetic system is to build a prison, and to make it sound like a lullaby. The morphology of the poem is, in the end, a perfect mime of its warning. The seduction of the lotos is the seduction of a world that has relinquished the abrasive, difficult, and dynamic structures of narrative life for a smooth, flawless, and utterly static form. It is a morphology of death made indistinguishable from a morphology of peace, and it remains one of the most profound formal achievements in the language.

## References

[1] Cooper, Helen. "Architectonics of Quest: The Spenserian Legacy in Victorian Narrative Poetry." *Journal of Poetic Form and Lineage*, vol. 45, no. 2, 2022, pp. 178–95. doi:10.1093/jpfl/45.2.178.

[2] Dubois, Frédéric. "The Living Text: Towards a Morphological Approach to Literary Analysis." *Modern Philology Quarterly*, vol. 81, no. 1, 2023, pp. 41-59. doi:10.1086/mpq.2023.81.1.41.

[3] Martinez, Elena. "Sonic Patterns as Cognitive Models: Rhyme and Mental Process in the Lyric." *Cognitive Literary Science Review*, vol. 19, no. 3, 2021, pp. 75–92. https://www.clsrjournal.org/articles/19.3/martinez

[4] Nair, Priya. "Razing the Stanza: Structural Dissolution as Meaning in Victorian Choric Odes." *Victorian Poetry and Form*, vol. 58, no. 3, 2022, pp. 210–28. doi:10.1353/vpf.2022.0015.

[5] Reynolds, Matthew. "The Grammar of the Dream-State: Syntax and the Unconscious in Tennyson's Early Poetry." *Journal of Victorian Psychology and Literature*, vol. 14, no. 2, 2024, pp. 145–63. https://www.jvpl.org/14.2/reynolds

**Volume 3, Issue 2, December 2025** **E-ISSN: 2584-167X**

[6] Schmidt, Clara. *Victorian Soundscapes: Acoustic Erosion in the Dramatic Monologue*. Oxford UP, 2021. doi:10.1093/oso/9780192897656.003.0008.
[7] Sharma, Anya. "The Dissolving 'I': Agency and Syntax in the Victorian Dramatic Monologue." *Textual Practice*, vol. 37, no. 1, 2023, pp. 82–101. doi:10.1080/0950236X.2023.2178901.
[8] Tanaka, Kenji. "The Neural Music of Inertia: A Cognitive-Metric Reading of Spondaic Drag." *Poetics Today*, vol. 45, no. 2, 2024, pp. 125–42. doi:10.1215/03335372-11003456.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*

38

Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

# Exegetical Richness of Teyvaccilaiyār on the Cōl-atikāram (Word-Section) of the Tolkāppiyam

**Dr. R. Vanithamani**, Assistant Professor of Tamil, Queens College of Arts Sciences For Women, Punalkulam Pudukkottai. Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0009-0007-4539-7776

## Abstract

*Tolkappiyam is a Remarkable example of the Structure of the Tamil Language and the Structurevof Tamil Literature that Studied and Compiled Sufficient date by is in Harmony with life. Before creating this famous work, the author Tolkappiyar studyind the classivscal grammar, the Multidisciplinary works written by the scholars of his time, the literature created by the great poets before him, the literary genres such as Bisi, Angasdam, Mudusol, Pannatti, etc. That were the common language of the people, and the many idioms they explaining and explaining in detail the types of words formed by phonemes and the way in which they should be presented in acontinuous language. In the pre- historic into two types. Monolingual and continuous. In the per-historic period, many words must have been presented in monolingual form. During the best times of intellectual development, cultural maturity and civilizational advancement, people formed a series of Languages using their own dialects to exchange ideas, compose song and create art. That is why, at the beginning of the era of the word system, tolkappiyar has extensively studied the series structure of the Tamil Language and provided adescriptive grammar. In the klavyakam, there are differences in the following aspects for the series of grammar. In the klavyakam, there are differences in the following for the series of it also explains the grammar of series, explains the grammar of singular wordsin the areas of nomenclature, verbology, interrogatives, and possessives, and fills in the missing grammatical elements. Finally, he completed the composition in the field of archaeology, thus, he is called the compiller, payiram praises him. In this way, this study aims to examine the text of Deivachilaiyar from a linguistic perspective.*

**Keywords:** Tamil, Grammar, Language, Tolkappiyam, Deivachillaiyar, Agasthiyar, Paniniyar, Urayvalam.

## References

[1] *Iraiyanar Kalaviyalurai*. Kazhaga Veliyeedu, Chennai, 1976.
[2] Kandhasamy, So. Na. *Tholkappiyath Thelivu*. Abirami Pathippagam, Annamalai Nagar, 1977.
[3] Kandhasamy, So. Na. *Puraṭchikkāppiyam*. Abirami Pathippagam, Annamalai Nagar, 1972.
[4] Kandhasamy, So. Na. *Deivachchilaiyar Uraiththiram*. Abirami Pathippagam, Annamalai Nagar, 1981.
[5] *Tholkappiyam, Ezhuthathikaram*. Nachinarkkiniyam, Kazhaga Veliyeedu, Chennai, 1965.
[6] *Tholkappiyach Suththira Viruththi*. Thiruvavaduthurai Aadeenam, Thiruvavaduthurai, 1968.
[7] Deivachchilaiyar Urai. *Tholkappiyam, Sollathikaram*. Kazhaga Veliyeedu, Chennai, 1963.
[8] Ilampooranam. *Tholkappiyam, Sollathikaram*. Kazhaga Veliyeedu, Chennai, 1973.

Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

[9] Senavaraiyar. *Tholkappiyam, Sollathikaram*. Kazhaga Veliyeedu, Chennai, 1952.
[10] Nachinarkkiniyam. *Tholkappiyam, Sollathikaram*. Kazhaga Veliyeedu, Chennai, 1962.
[11] Kalladanar. *Tholkappiyam, Sollathikaram*. Kazhaga Veliyeedu, Chennai, 1964.
[12] *Pirayogavivekam*. Saraswathi Mahal Veliyeedu, Thanjavur, 1973.
[13] Kunasagarar. *Yāpparungkalak Kārikai*. Annamalai University Publication, Annamalai Nagar, 1973.
[14] *Veerachozhiyam*. Kazhaga Veliyeedu, Chennai, 1970.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*



Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

# தெய்வச்சிலையாரின் தொல்காப்பியச் சொல்லதிகார உரைவளம்

**முனைவர் இரா. வனிதாமணி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை குயீன்ஸ்கலை அறிவியல் மகளிர் கல்லூரி, புனல்குளம், புதுக்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0007-4539-7776**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ்மொழியின் அமைப்பினையும் வாழ்வியலோடு பொருந்திய தமிழ் இலக்கியத்தின் கட்டுக்கோப்பினையும் வியத்தகு வகையில் விளக்கிக்கூறும் செவ்வியல் இலக்கணம் தொல்காப்பியம் ஆகும். இப்பெரும் பனுவலை படைப்பதற்கு முன்னர், ஆசிரியர் தொல்காப்பியர் தம் காலத்து அறிஞர்கள் எழுதிய பல்துறை சார்ந்த படைப்புக்களையும், தமக்கு முற்பட்ட புலவர் பெருமக்கள் படைத்திருந்த இலக்கியங்களையும், மக்கள் வழக்காக விளங்கிய பிசி, அங்கதம், முதுசொல், பண்ணத்தி முதலிய இலக்கிய வகைகளையும், அன்றாடப் பேச்சில் அவர்கள் புலப்படுத்திய வழக்காறுகள் பலவற்றையும் பயின்று தோய்ந்து ஆய்ந்து போதிய தரவுகளைத் தொகுத்தார். ஒலிக்கூறுகளால் உருவாக்கப்படும் சொல்லின் வகைகளையும், அவை தொடர் மொழியில் வழங்குதற்குரிய வழி முறையினையும் விளக்கமாகவும், விரிவாகவும் கூறும் நோக்கில் சொல்லதிகாரத்தினை உருவாக்கியுள்ளார். தனிமொழி, தொடர்மொழி எனச் சொல் இருவகைப்படும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் (pre-historic period) சொற்கள் பலவும் தனிமொழியாகவே வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும். சிந்தனை வளர்ச்சியும் பண்பாட்டு முதிர்ச்சியும் நாகரிகமேம்பாடும் சிறந்த காலத்தில் மக்கள் தனிமொழிகளினால் தொடர் மொழிகளை அமைத்துக்கொண்டு கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டனர் பாடல்கள் புனைந்து கலை படைத்தனர். எனவே தான், சொல்லதிகாரத்தின் தொடக்கத்தில் தமிழ்மொழியின் தொடர் அமைப்பினைத் தொல்காப்பியர் விரிவாக ஆராய்ந்து விளக்க இலக்கணம் (Descriptive Grammar) தந்துள்ளார். கிளவியாக்கத்தில் அல்வழித் தொடர்களுக்கும், பின்வரும் இயல்களில் வேற்றுமைத் தொடர்களுக்கும் இலக்கணம் கூறி, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் ஆகிய பகுதிகளில் தனிச்சொற்களின் இலக்கணத்தை விரித்துரைத்து, விடுபட்ட இலக்கணக் கூறுகளை இறுதியில் எச்சவியலில் அமைத்து முழுமை செய்துள்ளார். இதனால், புலம்தொகுத்தோன் என்று இவரைப் பாயிரம் பாராட்டுகிறது. இவ்வகையில் தெய்வச்சிலையாரின் தொல்காப்பிய சொல்லதிகார உரைவளத்ததினை ஆராய்வதே இவ்வாய்வாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** தமிழ், இலக்கணம், மொழி, தொல்காப்பியம், தெய்வச்சிலையார், அகத்தியர், பாணினியார், உரைவளம்.

**முன்னுரை**

தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு உரை எழுதிய இடைக்கால தமிழ்மொழி உரையாசிரியர்களில் ஒருவர் தெய்வச்சிலையார் ஆவார். இவரது காலம் 15 ஆம் நூற்றாண்டு ஆகும். பல உரையாசிரியர்கள் தம், தம் இலக்கிய வளத்தையும், மொழி வன்மையையும் காட்டியுள்ளனர். இவ்வகையிலே, மொழியியலில் தெய்வச்சிலையார் பல நுணுக்கங்களையும், சொல்லாடலையும் பயன்படுத்தியுள்ளார். மேலும், நாட்டு வழக்கிலும் ஏட்டு வழக்கிலும் பயிலப் பெற்ற தமிழ் மொழியின் அடிப்படை அமைப்பினை விளக்கும் வகையில் உயிர், மெய், சார்பு என்ற எழுத்துக்களின் நெடுங்கணக்கு வரிசை, அவை மொழியில் தோன்றும் பாங்கு, மொழி ஒலியைப் பேச்சுறுப்புக்கள் வெளிப்படுத்தும் முறை ஆகிய இலக்கணக் கூறுகளை எழுத்ததிகாரத்தின் அறிமுகப்பகுதி ஆகிய நூல்மரபு, மொழி மரபு, பிறப்பியல் ஆகிய மூன்றியல்களில் தோன்றக் முறைப் பற்றிக் கூறினார். மேலும், பிழை நீக்கிப் பேசுதலும்

எழுதுதலும் தான் மொழியின் செவ்வியல் தீமையினைப் பேணிக்காக்கும் என்ற பெருநோக்கில், புணரியல் முதலாகக் குற்றியலுகரப் புணரியல் முடிய ஆறு இயல்களில் புணர்ச்சி இலக்கண விதிகளைத் தொகுத்தும் வகுத்தும் இலக்கணம் அமைந்துள்ளது. இலக்கணம் என்பது இயல்பு, தன்மை, அழகு என்ற தன்மையினையும் அழகினையும் தக்க வகையில் புலப்படுத்திய ஆற்றலும் தெளிவும் தொல்காப்பியரிடம் காணலாம். இதன் வழியே, தெய்வச்சிலையார் மொழியியலில் தம் சொல்லடைலை மிகவும் தெளிவாகப் பயன்னடுத்தியுள்ளார். இவ்வகையிலே, இவ்வகையில் தெய்வச்சிலையாரின் தொல்காப்பிய சொல்லதிகார உரைவளத்ததினை ஆராய்வதே இவ்வாய்வாகும்.

**மொழியியலும் பாவியலும்**

இன்றைய மொழியியலாரின் கருத்துப்படி எழுத்ததிகாரம் என்பது தமிழின் ஒலியனியல் (Phonology), பேச்சொலியியல் (Acoustic phonetics), உருபன் ஒலியனியல் (Morpho-phonemics) என்ற மொழியியற் கூறுகளை கொண்டுள்ளது. தெய்வச்சிலையார், சொல்லதிகாரம் என்பதுதான் இலக்கணம் (Grammar) என்று வியந்து கூறியுள்ளார். மொழியியலார் கூறும் உருபனியல் (Morphology), தொடரியல் (Syntax) என்ற பகுதிகள் சொல்லதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன. மேலும், சொற்பொருளியல் (Semantics) இடையியல், உரியியல், பொருளியல், மரபியலும் பற்றியும் தொல்காப்பியர் கூறியுள்ளார். ஆகையால், இலக்கிய அமைப்புக்குரிய பொருண்மை பொருளதிகாரத்தின் முற்பகுதியில் அகத்திணை, புறத்திணை, களவியல், கற்பியல், பொருளியல் என்ற ஐந்து இயல்களில் சுவைபடச் சொல்லப் பெற்றுள்ளது. திறனாய்வாளர்கள், இலக்கிய ஆக்கத்திற்கு உரிய முதல் உறுப்பாகச் சுட்டும் பொருண்மை அல்லது அடிக்கருத்து (subject matter, theme) ஆகியவை முறைப்படத் தொல்காப்பியரால் வகையும் வரையறையும் செய்துள்ளனர். மேலும், கருத்துக்களை வனப்புறப் புலப்படுத்தும் உணர்ச்சி (emotion), கற்பனை (imagination) என்ற உறுப்புக்கள் இலக்கிய ஆக்கத்திற்கு தேவை என்றனர் இன்றைய திறனாய்வாளர். இவ்விரு உறுப்புகளையும் முறையே மெய்ப்பாட்டியல், உவமவியல் ஆகிய இரண்டு பகுதிகளில் தொல்காப்பியர் சிறப்பாக வெளியிட்டுள்ளார். தொல்காப்பியர் செய்யுளியல் என்ற பெயரில் இலக்கிய வடிவங்களையும், வகைகளையும் விரிவாக ஆராய்ந்து இலக்கணம் கூறியுள்ளார். மரபியலில் எஞ்சிய பொருட் கூறுகளை எடுத்துரைத்துள்ளார். எனவே, தொல்காப்பியம் ஒரு முழுமையான இலக்கணமாகவும் (Grammar), பாவியலாகவும் (Poetics and Prosody) அமைந்து தமிழர்தம் பண்பாட்டுச் சின்னமாக ஓங்கி ஒளிவீசுகிறது எனலாம். இத்தொல்காப்பியத்தில் வழி நின்று தெய்வச்சிலையார் தம் உரைவளத்தினையும், மொழியியல் போக்கினையும் திறம்பட இயற்றியுள்ளார் என்பது புலனாகிறது.

**தொல்காப்பியத்தின் தனித்தன்மை**

தொல்காப்பியத்தில்,சங்க இலக்கியங்கள் விதித்துள்ள இலக்கண மரபுகள் மாற்றமும் புதுமையும் பெற்று விளங்கியதைகாண முடிகிறது. ஆதலின் தொல்காப்பியரின் காலம் பாட்டும், தொகையும் ஆகிய சங்க இலக்கியங்களுக்கு (கி.மு. 400 கி.பி. 300) முற்பட்டது என்பது அறிஞர் பலரின் கருத்தாக அமைகின்றன. சங்கப் பாடல்களில் யவனர் என்ற சொல் பல இடங்களில் இடம் பெற்றது. எனின், தொல்காப்பியர், ஆவோ(டு) அல்லது யகரம் முதலாது என்று கூறுகின்றார். ஆதலின், மொழிக்கு முதலில் யகரமெய் ‘ஆ' என்ற ஒரே உயிர் எழுத்துடன் மட்டுமே கூடி, யாண்டு, யாது, யானை, யாமை என மொழிக்கு முதலில் வருதால், அவர் காலத்து வழக்கு என்பதும், யவனர், யூபம், யூகம் என்பன அவருக்கு மிகவும் பிற்காலத்து வழக்கு என்பதும், இக்காரணத்தினாலும் தொல்காப்பியர் சங்க இலக்கியம், மற்றும் பாணினி எழுதிய அட்டாத்தியாயி (கி.மு. 400) ஆகிய பனுவல்களுக்கு முற்பட்டவர் (கி.மு. 500) என்பதும் தெளிவாகிறது. தொல்காப்பியருக்கு வடமொழி, பாலி, பாகதம் முதலிய பலமொழிப் பயிற்சி உண்டு.. வடமொழிவாணர் மூலாதாரம், உந்தி, நெஞ்சு என்ற அக உறுப்புக்களில் (internal

Academic Research News
*Peer-Reviewed Journal*



Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

organs) எழுப்பப்படும் ஓசைக்குக் கூட அளவு (மாத்திரை) கூறுகின்றனர். அவர் கருத்தினைத் தொல்காப்பியர் அறிந்தும்கூட அதனைப் பிறப்பியலில் கூறவில்லை. மாறாக, தமிழ் மரபினைப் பின்பற்றி உந்தியில் எழுப்பப்படும் காற்று தலை, மிடறு, நெஞ்சு என்ற இடங்களில் நிலைபெற்றுப் பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்ற உறுப்புக்களில் பொருந்திப் பலவகை இயக்கத்தினால் (articulation) வெளிப்படும் பொருள் பொதிந்த ஓசைக்குத்தான் மெய்,தெரி, வளியிசை (meaningful sound) அளவு கூறியுள்ளார். இவ்வுண்மையினை,

**அகத்தெழு வளியிசை அரில்தப நாடி**
**அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே;**
**அஃ(து) இவண் நுவலா(து) எழுந்துபுறத்(து) இசைக்கும்**
**மெய்தெரி வளியிசை அளபு நுவன்றிசினே (தொல்., நூ. 102)**

என்பதாகும். இவ்வாறாக, பொருளதிகாரத்தில் தமிழர்களின் வாழ்வியலாகிய அன்பொடு பொருந்திய அகன் ஐந்திணை ஒழுக்கத்திற்கு, வடமொழி இலக்கியங்களில் காணப்பெறும் கந்தருவ நெறியை ஒருபுடையான் ஒப்புமை' கூறியுள்ளார். கி.பி. 11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய யாப்பருங்கலவிருத்தியும்,வீரசோழியமும் சுட்டிச் சென்றன. மேலும், தென்மொழி வடமொழி ஆகிய இருமொழிகளிலும் புலமை முற்றிய மாதவச் சிவஞானமுனிவர், தமிழ் இலக்கணத்தின் தனித்தன்மையினை தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும் குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின். பகுதிகளும் வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படாமையானும்.... என்று ஒப்பியல் ஆய்வாளராக நின்று அறுதியிட்டுக் கூறுதலை வடமொழிச் சார்பாகப் பேசும் இன்றைய அறிஞர் பெருமக்கள் கூர்ந்து நோக்க வேண்டும் என்று கூறுகின்றார். மேலும், தொல்காப்பியர் சர்வாதிகாரியாக நின்று தமிழுக்கு இலக்கணம் படைத்துள்ளார். மொழியின் வளர்ச்சியையும் மாற்றத்தையும் கருத்தில் கொண்டு, பழையன கழிதற்கும் புதியன அறிமுகம் ஆவதற்கும் உரிய முறையில் நூற்பாக்களில் மிகைச்சொல் (இலேசு), விதப்புக்கிளவி முதலியவற்றையும் புறநடை நூற்பாக்களையும் அமைத்துள்ளதன் வாயிலாக இலக்கண உலகில் ஒரு சனநாயகவாதியாகவே காட்சி தருகிறார் என்பதில் வியப்பில்லை.

தமிழர்களுக்குக் கிடைத்த தனிப்பெரும் இலக்கணம் தொல்காப்பியம் ஆகும். மேலும், தனிப்பெரும் அறநூல் திருக்குறளாகவும், தனிப்பெருங் காப்பியம் சிலப்பதிகாரமாகவும் இருப்பதை அறிய முடிகிறது. தொல்காப்பியர் ஒவ்வோர் அதிகாரத்தின் இயல்களையும் அளவையியல் நோக்கிலும், காரண காரிய அடிப்படையில் அமைத்துள்ளார்.மேலும், அழகுணர்ச்சி தோன்ற ஒவ்வோர்அதிகாரத்தையும் ஒன்பது, ஒன்பது இயல்களாகப் வகுத்தும் கூறியுள்ளார். இலக்கண உலகில்'பாணினியின் இலக்கணம் அஷ்டாத்தியாயி எனில், தொல்காப்பியம் இலக்கணம் நவாத்தியாயி எனக் கூறும் அளவிற்கு சிறப்பு பெற்றுள்ளன.

**தொல்காப்பிய உரைவளம்**

தொல்காப்பியத்திற்குப் பலர் உரை கண்டனர். அவருள் இளம்பூரணர் நூல் முழுமைக்கும் தமிழ் மரபினைப் எளிய நோக்கில், இனிய உரை தந்த முதல்வர் ஆகின்றார். தமக்கு முற்பட்ட உரையாசிரியர்களைக் குறிப்பினும், அவர்களது உரைகள் கிடைக்கவில்லை. மேலும், எழுத்ததிகாரத்திற்கு நச்சினார்க்கினியரும், சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையரும், பொருளதிகாரத்திற்கு இளம்பூரணரும், எழுதிய உரைகள் சிறப்பு பெற்றுள்ளன. எனினும், பொருள்திகாரத்திற்குப் பேராசிரியரின் உரை மிகுபயன் தருவனவாக அமைந்துள்ளன. சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகிய நால்வர் உரையும் முழுமையாகக் கிடைத்துள்ளன. கல்லாடனாரின் உரை இடையியல்

**Volume 3, Issue 2, December 2025** **E-ISSN: 2584-167X**

முதல் 10 நூற்பாக்கள் வரை மட்டுமே கிடைத்துள்ளது. பெயர் அறியப்படாத உரை 'பழைய உரை' என்ற பெயரில் கழக வெளியீடாக வந்துள்ளது. இவ்வுரை கிளவியாக்கம், வேற்றுமையியல் ஆகியவற்றுக்கும், வேற்றுமை மயங்கியலில் இறுதி இரண்டு நூற்பாக்கள் தவிர எஞ்சிய பகுதி வரையுமே கிடைத்துள்ளது. விளிமரபு முதலியவற்றுக்குக் கிடைக்கவில்லை. இவ்வுரைகள் யாவும் உரையாசிரியர்கள் தமக்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டு எழுதப்பெற்ற மூல நூலினை எவ்வெவ்வாறு புரிந்து கொண்டனர் என்பதையே புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.மேலும், அவர்தம் கருத்துக்கு ஏற்ற வகையில் உள்ளனவற்றை இக்காலத்து அறிஞர் பெருமக்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். புதிய விளக்கங்களும் கண்டுள்ளனர். இக்கட்டுரையில் தெய்வச்சிலையார். தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு தந்துள்ள உரைகளில் காணப்படும் கருத்துக்கள் சிலவற்றை காணலாம்.

**தெய்வச்சிலையார்**

தெய்வச்சிலை என்ற சொல் தெய்வமால்வரை எனச் சிலப்பதிகாரம் போற்றும் கயிலை மலையினைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளது. எனவே தெய்வச்சிலையார் என்ற சொல் கயிலை நாதன் ஆகிய சிவனைச் சுட்டுகின்றது. எனினும், சிலை என்ற சொல் மலையினை மட்டும் குறிக்காமல், வில்லையும் குறித்தலால் தெய்வச்சிலையார் என்ற பெயர் தெய்வத்தன்மையுடைய வில்லினை ஏந்திய இராமபிரான் என்று பொருள்படுகின்றது. கி.பி. 8ஆம் நூற்றாண்டினராகிய திருமங்கை மன்னன் திருப்புல்லாணி என்னும் திவ்விய தேசத்தில் கோயில் கொண்ட பெருமாளை,

**வவ்வித் துழாயதன்மேற் சென்ற தனிநெஞ்சம்**
**செவ்வி அறியாது நிற்கும்கொல்? நித்திலங்கள்**
**பவ்வத் திரையுலவு புல்லாணி கைதொழுவேன்**
**தெய்வச் சிலையார்க்(கு) என் சிந்தைநோய் செப்புமினே (தொல்., நூ. 106)**

என்று மங்களாசாசனம் செய்துள்ளார். மேலும், திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம்பெற்றுள்ள அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் போன்ற ஈசன் திருப்பெயர்களைப் பின்பு தம் மக்கட்குச் சூட்டினர்.மேலும், திருமங்கை மன்னனின் பாடலில் காணப்பெறும் தெய்வச் சிலையார் என்ற பெயர், கல்வெட்டுக்களில் திருமால் பெயரே என்ற உண்மை பிறகு நாம் அறிந்து கொள்ள முடிந்தது. மேலும், கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் தெய்வச்சிலையாரின் வரலாற்றினை முதன்முதல் ஆராய்ந்த பேரறிஞர் மு. இராகவையங்கார் தம் சாசனத் தமிழ்க் கவிசரிதம் என்னும் நூலில், இவர் காலம் கி.பி. 13 ஆம் நூற்றாண்டு எனத் தெளிவுறுத்தியுள்ளார்.

தெய்வச்சிலையாரின் பெயர் திருமால் என்றாலும், இவர் சைவசித்தாந்தத்தில் ஈடுபாடுடையவர் என்பது கிளவியாக்கத்தில், 'மன்னாப் பொருளும் அன்ன இயற்றே" என்ற நூற்பாவில் உள்ளதை நாம் காண முடிகிறது. மேலும், உரையில் பதி, பசு, பாசம் என்ற முப்பொருளும் ஒருவரால் படைக்கப் பெறாமல் என்றும் விளங்குதலின் அனாதி எனக் குறித்திருத்தலால் புலனாகிறது. இவர் நெசவுத் தொழில் புரிந்தவர் என்பதை, 'வினையே செய்வது செயப்படு பொருளே' (நூ. 109) என்ற நூற்பாவின் இனிய உரைவிளக்கத்தால் உணர முடிகிறது.மேலும், இவர் முருகப்பெருமானிடம் நிறைந்த பற்றுடையவர் என்பது எச்சவியலில் 'உலகம் உவப்ப' (நூ. 408) எனத் தொடங்கும் திருமுருகாற்றுப்படைக்கு கூறியுள்ள விரிவுரையால் அறியப்படுகின்றது.

தெய்வச்சிலையார் சங்க இலக்கியங்களையும் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம் போன்ற அற இலக்கியங்களையும் காப்பியங்களையும் ஆழமாகக் கற்றவர் என்பது அவர்தம் உரையில் மூலம் அறிய முடிகின்றது. மேலும், வடநூல் இலக்கணமும் பயின்றுள்ளார். தொல்காப்பிய உரையாசிரியர்களில் இவர் ஒருவரே இரண்டிடங்களில் பாணினியைப் பெயர் சுட்டித் தம் உரையில் குறித்துள்ளார். மேலும், தமக்கு

Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

முற்பட்ட இளம்பூரணர், சேனாவரையர் ஆகியோரின் உரைகளையும் நன்கு ஆராய்ந்து கொண்டு சிலவற்றை மறுத்தும் சென்றுள்ளார். இவர் சொல்லதிகாரத்திற்கு உரை எழுதியிருப்பினும் எழுத்ததிகாரத்தையும் பொருளதிகாரத்தையும் நுணுகிக் கற்றவர் என்பது இவர் எடுத்துக்காட்டும் மேற்கோள் நூற்பாக்களினால் நம்மால் அறிந்துக் கொள்ள முடிகின்றது. மொழியியல் உணர்வுடன் பல இடங்களில் இவர்தரும் விளக்கம் அமைந்துள்ளது. இவர்,தம் கருத்துக்களை விளக்குதற்குப் பல்வகை உத்திகளையும் பயின்றுள்ளார். ஏனையோர் கொள்ளாத பல பாட வேறுபாடுகளை இவர் கொண்டுள்ளார். மேலும், பிறர் குறிக்காத புதுக் கருத்துக்கள் பலவற்றைத் தம் உரையில் குறித்தனர். முதலில் இவர் கூறும் இலக்கண ஆசிரியர்களைப் பற்றிக் காண்போம்.

**தெய்வச்சிலையார் சுட்டும் இலக்கணிகள்**

**அகத்தியனார்**

தொல்காப்பியர்க்கு ஆசிரியர் அகத்தியனார் என்பது ஒரு பொதுக் கருத்தாகும் எனின், இப்போது அகத்தியம் என்ற பெயரில். காணப்படும் இலக்கண நூலைச் செய்தவர் தொல்காப்பியர்க்குப் பிற்பட்டவர் என்றே தெரிகிறது. தொல்காப்பியர் செய்யுள் ஈட்டச் சொல்வகை நான்கனுள் திசைச் சொல்லையும் குறித்துள்ளார். எச்சவியலில்,

**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்**
**தம்குறிப் பினவே திசைச்சொற் கிளவி (தொல்., நூ. 56)**

எனவரும். நூற்பாவில் சுட்டப்பெறும் திசைச்சொல் பற்றி உரையாசிரியர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர். மேலும், செந்தமிழ் நாட்டைச் சேர்ந்த பன்னிரு நிலங்கள், பொதுங்கர் நாடு, தென்பாண்டி நாடு, ஒளி நாடு, குட்டநாடு, பன்றி "நாடு, கற்கா நாடு, சீத நாடு, பூழிநாடு, மலைநாடு, அருவா நாடு, அருவாவடதலைநாடு, குடநாடு என்பனவாகும் என்பர். இளம்பூரணர்,சேனாவரையர் பொதுங்கர் நாட்டிற்கு மாறாகப் பொங்கர் நாட்டினைப் பற்றிக் கூறியுள்ளதை அறிய முடிகிறது. செந்தமிழ் நாட்டில் வழங்குவன இயற் சொற்கள் என்றும், அதனைச் சார்ந்த பன்னிரு நிலத்தும் வழங்குவன திசைச் சொற்கள் என்றும் தொல்காப்பியரின் கருத்தாக அமைந்துள்ளதையும் காண முடிகிறது.

பன்னிரு நிலம் என்பது செந்தமிழ் வழங்கும் நாட்டினைச் சார்ந்த (பக்கத்து) நிலப்பகுதிகள் என்றும், அங்குப் பேசப் பெற்றுத் தமிழில் இடம் பெறுவன திசைச் சொற்கள் என்பதும் புலனாகிறது. எனினும், தெய்வச்சிலையார் வேறுவகையான ஒரு விளக்கத்தையும் தந்துள்ளார். மேற்சுட்டிய பன்னிரு நிலங்களும் செந்தமிழ் நாட்டின் வேறுவேறு பகுதிகள் ஆகும். இவை செந்தமிழ் நாட்டகத்த என்று குறித்தனர். எனினும், நூற்பாவில் செந்தமிழ் சேர்ந்த நாடு என்று கூறப் பெற்றதால், பன்னிரு இடங்களும் பிறநாடாகல் வேண்டும் என்று அவர்காலத்து அறிஞர் சிலர் கூறிவந்த கருத்தினையும் சுட்டியுள்ளார். குமரியின் தென்கரைக்கு அப்பால் கடலில் விளங்கிய பழந்தீபம், கொல்லம், கூபகம், சிங்களம், கன்னடம், வடுகம், கலிங்கம், தெலிங்கம், கொங்கணம், துளுவம், குடகம், குன்றகம் என்ற பன்னிரு தேயங்களில் பேசப் பெற்று மக்கள் கூட்டுறவினால் தமிழில் வந்து வழங்கும் சொற்களே திசைச் சொற்கள் என்கின்றார். முதலில் பார்த்த கருத்தின்படி, செந்தமிழ் நாடு என்பது செவ்விய தமிழ் வழங்கும் பகுதி. இது பெரும்பாலும் சங்கம் வைத்துத் தமிழ் ஆராய்ந்த மதுரைப் பகுதியைக் குறிக்கிறது ஆதலின், பாண்டிநாட்டார் பேசும் தமிழே செந்தமிழ் (Standard language); ஏனைய பன்னிரு நிலங்களும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் என்றும் அங்குப் பேசப் பெறுவன தமிழே எனினும், அவை செந்தமிழ் ஆகாது கொடுந்தமிழ் அல்லது வட்டார வழக்கு (Dialects) என்று அழைக்கப்பட்டன. இதனையே திசைச்சொல் என்று அழைத்ததையும் உணர முடிகிறது.

தமிழகம் என்பது பாண்டிய நாடு மட்டும் அன்று. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம் என்பதாகும். தெய்வச்சிலையார் பாயிரப் பகுதியைத் எடுத்துக்காட்டியுள்ளார். அதுவே செந்தமிழ் நிலம் என்றும், அதற்குப் புறத்தே பழந்தீபம்

Academic Research News

*Peer-Reviewed Journal*



Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

முதலாகச் சொல்லப் பெற்ற நாற்றிசை நாடுகளிலிருந்து வாணிபத்தின் பொருட்டு மக்கள் கூட்டுறவினால் தமிழில் வந்து பயிலும் சொற்களே திசைக் கிளவி என்றும் எண்ணினார். நச்சினார்க்கினியர் இவ்விருவகைக் கருத்துக்களையுமே ஏற்று விளக்கம் தந்தார். தெய்வச்சிலையார், திசைச்சொற்கள் பற்றிய மற்றொரு பட்டியலையும் தந்துள்ளார்.

**... குடபால் இருபுறச் சையத்து**
**உடனுறைபு கூறும் தமிழ்திரி நிலங்களும்**
**முடியுடை மூவர் இருநில ஆட்சியின்**
**அரசு மேம்பட்ட குறுநிலக் குடுமிகள்**
**பதின்மரும் உடனிருப்பு இருவரும் படைத்த**
**பன்னிரு திசையில் சொன்னயம் உடையவும் (தொல்., நூ. 125)**

என்பதை அகத்தியர் சூத்திரம் என்று காட்டியுள்ளார். சையம் என்பது மேற்கு மலையினைக் குறித்தற்குப் பரிபாடலில் வழங்கப்பெறும் சொல்லாகும் (11.14; 12.2). மேலும், தமிழ் திரிபுற்றுப் பேசப்படும் நிலங்களிலும் மூவேந்தருக்கு அடங்கிய மேம்பட்ட குறுநில அரசர் பன்னிருவரின் நிலங்களிலும் வழங்கப்பெறுவன திசைச் சொற்களே என்று அகத்தியர் சூத்திரக் கருத்தினைத் தெய்வச்சிலையார் கூறியுள்ளார். இவர் காலத்தில் அகத்தியம் என்ற இலக்கண நூல் வழங்கியது எனலாம். எனினும், இந்நூற்பாவின் ஆசிரியராகிய அகத்தியர் தொல்காப்பியருக்குப் பிற்பட்டவர் என்பதில் ஐயமில்லை. மேற்காட்டிய நூற்பாவில் இடம்பெறும் சையம் என்ற சொல் வழக்கு, தொல்காப்பிய விதிக்குப் புறம்பாகவும் பிற்பட்டதாகவும் இருத்தலே போதிய சான்றாக அமைகின்றன.

தொல்காப்பியர் 'பன்னிரு நிலம்' என்பதற்கு என்ன கருத்துடையார் என்பதைப் புரிந்துகொள்ளும்படி தெய்வச்சிலையாரை உள்ளிட்டோர் கூறும் கருத்துக்களை நாம் கவனத்துடன் ஏற்றுக் கொள்ளுதல் கூடும். எனினும், மணிமேகலையிலும், திருமந்திரத்திலும் பதினெட்டு மொழிகள் குறிக்கப்பெற்றுள்ளன. நன்னூலார் செந்தமிழ் சேர்ந்த பன்னிரு வட்டாரங்களில் வழங்கி வருவனவும், தமிழகம் நீங்கிய அயல்நிலங்களிலிருந்து வழங்கிவரும் பதினெண்மொழிகளும் திசைமொழிகளே என்கிறார் (சொல். 273). மேலும், காலந்தோறும் தமிழ் மக்கள் உலகின் பல பகுதிகளுடனும் உறவாடியதன் விளைவாகத் திசைச் சொற்கள் மிகுதியாகத் தமிழில் உள்ளன எனலாம். தமிழில் அகத்தியர்க்கு ஒப்பாக வடமொழியில் பாணினியைக் கூறுதல் ஒருமரபாக அமைகின்றது.மேலும், இரண்டிடங்களில் தெய்வச்சிலையார் பாணினியாரைக் குறித்துள்ளார். அவ்விடங்களை இப்போது காண்போம்.

**பாணினியார்**

மூன்றாம் வேற்றுமைப் பொருண்மையினை விளக்கும் தொல்காப்பியர் ஒருவினை ஒடுச்சொல் உயர்பொருளை உணர்த்தும் பொருள் வழித்தோன்றும் என்று சிறப்புவிதியினை கூறியுள்ளார். **“ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே” (தொல்., நூ. 320)** இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகிய நால்வரும் ஒரே வகையாக உரை கண்டனர். அரசனொடு சேவகர் வந்தார், ஆசிரியனொடு மாணாக்கர் வந்தார் என்று எடுத்துக்காட்டுக்களை தந்தனர். இத்தொடரில் வருதல் என்ற ஒருவினையைச் செய்பவர் அரசரும், சேவகரும், ஆசிரியரும் மாணாக்கரும் ஆவர். அரசர் சேவகர், ஆசிரியர் மாணாக்கர் என்ற இரு சொற்களில், ஒடு உருபினை எச்சொல்லுடன் சார்த்தி வழங்குதல் வேண்டும் என்பதை நூற்பா கூறுகின்றது. உயர்பின் வழித்தே என்ற பகுதியில், உயர்பு என்பது உயர்பொருளை உணர்த்தும் பெயர்ச் சொல்லினைக் குறிக்கும். அரசர் சேவகர், ஆசிரியர், மாணாக்கர் என்ற இணைகளில் உயர்புடையவர் அரசரும், ஆசிரியரும் என்பதால், அச்சொற்களுடன் ஒடு உருபு கொடுத்து வினை முடிபு செய்தல் வேண்டும் என்பது உரையாசிரியர்கள் நால்வரின் உள்ளம் ஆகும். எனினும், உலக வழக்கில், நாயொடு நம்பி வந்தான் என்ற தொடர் காணப்படுகிறது. நாய், நம்பி இருவரும் வருதல் என்ற ஒருவினை

Academic Research News

*Peer-Reviewed Journal*

46

Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

புரியினும், ஒடு உருபினை நம்பிக்குச் சேர்க்காமல், நாய்க்குத் தந்து தொடர் அமைத்தல் வழுவன்றோ என்ற வினாவினை இளம்பூரணர் முதலில் கூறினார். மற்றையோரும் அதே எடுத்துக்காட்டினையே கூறி அவர் வழி விளக்கம் காண முற்பட்டனர். இளம்பூரணர் உயர்வு பலவகைப்படும் என்றும், குலம், தவம், நிலை, உபகாரம் என்பனவற்றில் ஒன்றானும் பலவானும் உயர்வு தோன்றும் என்றும் கருதினார். இவற்றுடன் கல்வி, வினை என்பனவற்றையும் சேர்த்துக் கூறினார் நச்சினார்க்கினியர். ஆதலின், நாயொடு என்று இழிந்த பொருட்கு ஒடு கொடுத்துச் சொல்லியது அந்நிலைக்கண் அது சிறப்புடைத்தாகலின் என்று நாயின் உயர்வினைக் குறித்தனர். சேனாவரையர், யாதானும் ஓராற்றான் அதற்கு உயர்வு உண்டாயின் அல்லது அவ்வாறு கூறார் என்று ஒருவாறு நாயும் உயர்வுடையது என்ற கருத்தில் எழுதினார். நாயினை இழிபிறப்பாக இகழினும், நன்றியுணர்வும் தலைவன்பால் காட்டும் பேரன்பும் காரணமாக மிகப்பெரிய யானையினும் உயர்புடையதாகவே நாலடியார் போற்றுகிறது:

**யான அனையவர் நண்(பு)ஒரீஇ நாய்அனையார்**
**கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் யானை**
**அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல்**
**மெய்யதா வால்குழைக்கும் நாய் (தொல்., நூ. 11)**

எனவே, நாய் ஓராற்றான் உயர்புடையதாகவே எண்ணப் பெறுதலின், நாயொடு நம்பி வந்தான் என்ற தொடர் வழுவற்றதாகவே கொள்ளப்பெறுதல் வேண்டும் என்பது உரையாசிரியர் நால்வரின் உள்ளம் ஆகும். நாயொடு நம்பி வந்தான் என்ற தொடர் உரையாசிரியர்களின் காலத்தில் மாகாபாரதத்தில் நம்பியாகிய தருமன் நாயுடன் (தருமதேவதை) வானகம் சென்ற கதைக் குறிப்பினைக் கொண்டுள்ளன. மேலும், இப்பகுதியை உற்று நோக்கினால் வீமன், அருச்சுனனையும் விட நாய் ஓராற்றான் உயர்வுடைமை புலனாகும். எனவே, ஒடு உருபு உயர்புடைய பெயர்ச் சொல்லுடன் சார்த்தி ஒருவினை உணர்த்தும் தொடரில் வழங்கப் பெறும் என்பது தொல்காப்பியரின் கருத்து என்பதை உரையாசிரியர் நால்வரும் புரிந்து கொண்டனர். எனின், தெய்வச்சிலையார் உயர்பின் வழி என்பது 'சிறவாத பொருள்' என விளக்கம் கூறியுள்ளார். (எ.டு. அமைச்சரொடு இருந்தான் அரசன்) இத்தொடரில் இருத்தல் என்ற ஒருவினைக்கு உரிய அரசர், அமைச்சர் ஆகிய இருவரைக் குறிக்கும் பெயர்களில் சிறவாத அமைச்சருடன் ஒடு கொடுத்துச் சொல்லப் பெற்றது என்றார். இவ்வாறு கூறுதற்கு மேற்கோளாக, இப்பொருள் பாணினியார்க்கும் ஒக்கும் என்றார். அப்பிரதானச் சொல்லுடன் (பிரதானம் என்பது சிறப்பு; அப்பிரதானம் 'சிறப்பில்லாதது) மூன்றன் உருபு (sahayukta) வரும் என்றார். இங்ஙனம் வருதற்கு எடுத்துக்காட்டாக, புத்ரேண ஸஹ ஆகத: பிதா என்ற தொடரினை மேற்கோள் காட்டுவர். இதன்பொருள் மகனொடு தந்தை வந்தார் என்பதாம். தொல்காப்பியர் கூறும் வேற்றுமை இலக்கணத்தையும் பாணினி கூறுவதையும் ஒப்பிட்டுப் பயின்ற தெய்வச்சிலையார் இருவரும் ஒரே விதமாகவே ஒருவினை ஒடுவிற்கு இலக்கணம் கூறினர் என்று நிறுவும் முயற்சியில் ஈடுபட்டார். என்றாலும், சிறப்புடைய பொருள்மேல் ஒடுவரும் எனப் பொருள் உரைத்தார் உளர் ஆயினும் என்று தமக்கு முற்பட்ட உரையாசிரியர்களைக் குறித்தனர். ஒப்பியல் நோக்கில் கற்க வேண்டும் என்ற எழுச்சியால் தெய்வச்சிலையார் எழுதியிருப்பினும், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோரின் விளக்கமே தமிழ் மரபு காப்பதாக அமைந்துள்ளமை காண முடிகிறது. மேலும், வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பனவற்றையும் அவை போன்ற பிற பண்புகளையும் உணர்த்துவனவாய் ஒரு பொருளின் இயல்பினை விசேடித்து இருசொல்லும் ஒரு பொருள் மேல் வரும் தன்மையினையுடைய தொகைச் சொல் பண்புத்தொகை எனப்படும். இத்திறனை, வண்ணத்தின் வடிவின் அளவின் சுவையின் (என்று) அன்ன பிறவும் அதன்குணம் நுதலி இன்னது இதுவெனள வரூஉம் இயற்கை என்ன கிளவியும் பண்பின் தொகையே

Academic Research News

*Peer-Reviewed Journal*



Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

எனவரும் நூற்பாவினால் அறியலாம். எ.டு. கருங்குதிரை, வட்டப்பலகை, நெடுங்கோல், தீங்கரும்பு. இப்பண்புத் தொகைச் சொற்களின் முதற்கூறு ஆகிய கருமை, வட்டம், நெடுமை, தீ(ம்) என்பன முறையே குதிரை, பலகை, கோல், கரும்பு என்ற பொருள்களின் இயல்பினைச் சிறப்பித்து வந்தன. இவை முறையே வண்ணம், வடிவம், அளவு, சுவை என்ற பண்புகளைக் குறித்தன. இவற்றை Attributive Construction என்பர் மொழியியலார். எனினும், கருங்குதிரை என்ற பண்புத் தொகையினைக் கருமையை உடைய குதிரை என்று வேற்றுமைத் தொகையாகவும் எண்ணுதற்கு இடம் உண்டு. என்றாலும், வேற்றுமைத் தொகை இன்ன பொருள் இன்ன இயல்புடையது என்று விசேடித்து வருதல் இல்லை. எனவே, அங்ஙனம் விசேடித்து. வருவது பண்புத் தொகைக்கு மட்டுமே பொருந்துதலின், கருங்குதிரை முதலியவற்றை வேற்றுமைத் தொகையாகக் கொள்ளாது பண்புத் தொகையாகவே கொள்ளுதல் வேண்டும் என்பது தெய்வச்சிலையாரின் கருத்தாகும். மேலும் 'வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை என்பன தம்முள் ஒருபுடை ஒப்புமை யுடையவாதலின் பாணினியார் தற்புருடசமாசம் என்று குறியிட்டார்' என்று ஒப்பியல் நோக்கில் ஒரு கருத்தினையும் உரைத்தனர். தம் உரையில் தெய்வச்சிலையார் பாணினியைச் சுட்டிய இரண்டாவது இடம் இப்பகுதியாகும். எனினும், தமிழ் இலக்கண நூலார் வகுத்துக்கொண்டுள்ள தொகைக் கோட்பாடும் வடமொழியார் கொண்ட தொகைக் கோட்பாடும் வேறுவேறு ஆதலின், மேற்சுட்டிய நால்வகைத் தொகைகளும் பாணினி குறித்த தற்புருட சமாசத்துடன் ஒருவாறு தான் ஒப்புமையுடையன என்றார். ஆதலின், ஒவ்வாமையும் உடையன என்பது புலனாகும். வீரளசோழியம் தொகைப்படலத்திலும், பிரயோக விவேகம் சமாசப் படலத்திலும் வடமொழியில் கூறப்படும் தொகைக் கோட்பாடு விரிவாகக் கூறப்பெற்றன. வீரசோழியத்தில் தற்புருடன் வெகுவிரீகி (-பலநெல்), கன்மதாரயம் (கருமதாரயன்), துவிகு, துவந்துவம், அவ்வியபாவம் (-அவ்வியயீபாவம்) என்று அறுவகைத் தொகைகள் கூறப்பெற்றன. பிரயோக விவேகத்திலும் இவை இடம் பெறினும் சில முன்பின்னாக மொழியப்பெற்றுள்ளன.

தொல்காப்பியர் வேற்றுமைத் தொகை, உவமத் தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை என்று தமிழிலக்கண மரபுக்கு ஏற்ற அறுவகைத் தொகைகளுக்கும் விதிகள் அமைத்துள்ளார். வடமொழிவாணர் கூறியவற்றுள் தற்புருடன் வேற்றுமைத் தொகையினையும், கருமதாரயன் பண்புத் தொகையினையும், துவிகு எண் தொகையினையும், துவந்துவன் உம்மைத் தொகையினையும், அவ்வியயீபாவம் முன்பின் மொழி அடுத்துவரும் இடைச்சொல் தொகையினையும், வெகுவிரீகி அன்மொழித் தொகையினையும் ஒருவாறு சுட்டியுள்ளார். தொல்காப்பியர் கூறிய வினைத் தொகை, உவமத் தொகைகளை வடமொழி இலக்கணம் சுட்டவில்லை என்பது காணத்தக்கது. ஆதலின் தொகைக் கோட்பாடு தமிழ் மரபினை ஒட்டியே தொல்காப்பியத்தில் கூறப் பெற்றுள்ளது என்பது புலனாகிறது. இனி, தெய்வச்சிலையார் தம் உரையில் உணர்த்தும் பிற்காலத்து இலக்கண ஆசிரியர், உரையாசிரியர்களில் ஒரு சிலரைப் பற்றிக் காண்போம்.

**பவணந்தி முனிவர்**

பவணந்தி முனிவர் சமணச் சான்றோர். கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆணைக்கு உட்பட்டு - அரசு புரிந்த சீயகங்கன் என்னும் குறுநிலத் தலைவனால் பேணப் பெற்றவர். விரிவுடைய, தொல்காப்பியத்தைச் செறிவுடையதாக அமைத்த சிறப்புக்கு உரியவர். இவர்,

**மக்கள் தேவர் நரகர் உயர்திணை**

**மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை (தொல்., நூ. 120)**

என்று சொற்பாகுபாடு செய்தனர். தொல்காப்பியத்தில் நரகரைப் பற்றிக் கூறப்படவில்லை. தொன்னூலையும், நன்னூலையும், ஒப்பியல் நோக்கில் பயின்றவராகிய தெய்வச்சிலையார்,

**தேவரும் மக்களும் விலங்கும் ஆகிய கதிப்பொருண்மை**
**கூறி நரககதிப் பொருண்மை கூறாதது என்னை எனின்,**
**அக்கதிமேல் நிகழ்வதோர் வழக்கு இன்மையிற் (தொல்., நூ. 12)**

என்று இயம்பினார், தொல்காப்பியரின் பாகுபாடு மிகவும் எளியது, உலகியல் உண்மையுடன் ஒத்தது. எனவேதான்,

**உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே**
**ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே (தொல்., நூ. 11)**

என்று சொல்லதிகாரத்தின் தொடக்கத்தில் தெளிவுறுத்தினார். தொல்காப்பியர் காலத்தில் மக்கட் பிறப்பேயன்றித் தெய்வம் சுட்டிய பெயர்களையும் உயர்திணையாகக் கூறும் வழக்கு நிலவியது. எனினும், நரகர் பற்றிய குறிப்பே இடம் பெறவில்லை. எனவேதான் பின்னூலார் மக்கள் கதி, தேவர் கதி, நரகர் கதி, விலங்கு கதி என்ற சமணப் பாகுபாட்டினை இலக்கணத்தில் புகுத்தியுள்ளார் என்பதைச் சொல்லாமற் சொல்லியுள்ளார்.

தெய்வச்சிலையார். செய்யுள் தொடர்களில் செவ்விய பொருளைப் புரிந்து கொள்ளுதற்குப் பயன்படும் பொருள் கொள்ளும் முறையினை, நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழி மாற்று என்று நான்காக எண்ணினர் தொல்காப்பியர் (சொல்., நூ. 400). அவர் காலத்திற்குப்பின் எட்டு, ஒன்பது என்ற அளவில் பொருள்கோள் முறை வளர்ச்சி பெற்றது. பவணந்தி முனிவர்,

**யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்**
**தாப்பிசை அளைமறி, பாப்பு, கொண்டு கூட்டு**
**அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே (தொல்., நூ. 10)**

என்று எண்வகைப் பொருள்கோள்களை எண்ணினார். எனின், யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியர் குணசாகரர் நிரனிறை மொழிமாற்று, சுண்ணமொழிமாற்று, அடிமறி மொழி மாற்று, அடிமொழி மாற்று, பூட்டுவிற் பொருள்கோள், புனல்யாற்றுப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்று ஒன்பது வகையாகக் கொண்டனர். தொல்காப்பியர் சுட்டியதற்குமேல் கூடுதலாகக் காணப் பெறுவன ஐந்தாகும். இவற்றைத் தெய்வச்சிலையார், அஃதேல் பூட்டுவிற் பொருள்கோள், புனல்யாற்றுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறி பாப்புப் பொருள்கோள், கொண்டு கூட்டுப் பொருள்கோள் எனவும் ஒருசாராசிரியர் உரைப்பவால் எனின்: அவற்றுள் யாற்றொழுக்கும் அளைமறிபாப்புப் பொருள்கோளும் திரிவின்றிப் பொருள்படுதலின் இயல்பாம். கொண்டுகூட்டு சுண்ணமொழி மாற்றுள் அடங்கும். பூட்டுவிற் பொருள்கோள் மொழிமாற்றுள் அடங்கும். தாப்பிசைப் பொருள்கோட் கண் முன்னொரு சொல் வருவிக்கவேண்டுதலின், இது "பிரிநிலைவினை' என்னும் சூத்திரத்தினுள் அடங்கும். என்று விளக்கினர். ஒரு சார் ஆசிரியர் எனக் குறிக்கப் பெற்றவர்கள் பிற்காலத்தவராகிய குணசாகரரும் பவணந்தியாரும் ஆவர். இவர்கள் மிகுத்துக்கூறிய பொருள்கோள்களைத் தொல்காப்பிய இலக்கணத்தில் அடக்கிக் காட்டினார் தெய்வச்சிலையார். இதனால், பிற்காலத்தின் கோட்பாட்டிற்கு இவர் உடன்படவில்லை என்பது புலனாகிறது.

**இளம்பூரணர்**

சொல்லதிகாரத்தின் முதல் நூற்பாவில், 'என்மனார்' எனவரும் வினைமுற்றுச் சொல்லினை இளம்பூரணர் 'என்ப' என்ற சொல்லின் திரிபாகக் கருதினார். குறைக்கும் வழிக் குறைத்தல் என்னும் செய்யுள் விகாரத்தினால் என்ப என்ற சொல்லில் இறுதியில் உள்ள பகரத்தைக் குறைத்து, விரிக்கும்வழி விரித்தல் என்பதனால் மன்னும் ஆரும் என்று இரண்டு இடைச் சொற்களைப் பெய்து என்மனார் என்று பயின்றுள்ளார் தொல்காப்பியர் என்பது இளம்பூரணரின் எண்ணம். இக்கருத்தினைத் தெய்வச்சிலையார் ஏற்கவில்லை.

Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

**பகரம் குறைக்கின்றது செய்யுள் இன்பம்**
**வேண்டியன்றே. ஆண்டுக் குறைத்தவழிப் பின்னும்**
**இரண்டெழுத்து விரிக்கல் வேண்டுமாயின்,**
**குறைத்ததனான் பயன் இன்மையின், இவ்வாறு எழுதும்**
**உரை குற்றம் என்க (தொல்., நூ. 120)**

என்று கடுமையாக மறுத்தனர். இம்மறுப்பு இளம்பூரணரை நோக்கியது என்பது இவ்விருவர் உரைப் பகுதிகளையும் ஒப்பிட்டுப் பயில்வார்க்குப் புலனாகும். மேலும், இறையனார் களவியலுரையாசிரியரும் இளம்பூரணர்க்கு முன்னமே என்ப என்ற முற்றுச் சொல்தான் செய்யுள் விகாரத்தால் என்மனார் என்று ஆயிற்று என்று. குறித்துள்ளார். ஆதலின், இருவரையுமே கருத்திற்கொண்டு தெய்வச்சிலையார் மறுத்துள்ளார் என்லாம். இனி, தெய்வச்சிலையார் உரையில் காணப்பெறும் சில சிறப்புக் கூறுகளைச் சற்று உற்று நோக்குவோம்.

**சிறப்புக்கூறுகள் சில**

சொல்லதிகாரத்தின் தோற்றுவாயில் கிளவியாக்கம் என்ற குறியீட்டிற்குப் பொருள் விளக்கம் தரும் வகையில் தெய்வச்சிலையார் மற்றைய உரையாசிரியர்களினின்றும் வேறுபடுகின்றார். இளம்பூரணர், கிளவிகள் பொருள்மேலாமாறு உணர்த்தினமையின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்து என்று பொருள்கண்டார். சேனாவரையார், வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான், இவ்வோத்துக் கிளவியாக்கம் ஆயிற்று என்று காரணம் கற்பித்தார். நச்சினார்க்கினியர் சேனாவரையரையும் கல்லாடனார் இளம்பூரணரையும் வழிமொழிந்தனர். 'எனின், தெய்வச்சிலையார் ஒருவர்தான், அது கிளவியது ஆக்கம் என விரியும். அதற்குப் பொருள் சொல்லினது தொடர்ச்சி என்றவாறு. சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து பொருள்மேல் ஆகும் நிலைமையைக் கிளவியாக்கம் என்றார். என்று புதிய விளக்கம் தந்தனர். கிளவியாக்கம் தனிமொழி இலக்கணம் அல்ல. தனிமொழிகள் ஒன்றொடு ஒன்று பொருத்தமுறத் தொடர்ந்து பொருள் புலப்படுத்தலைப் பற்றிக் கூறுதலின், தொடர்மொழி இலக்கணம் (Grammar on Syntax) என்ற அரிய கருத்தினை இவர்உரையில் காண்கிறோம். இன்றைய மொழியியல் அறிஞர்கள் இவர் கருத்தின் அருமையினை வியந்து பாராட்டுகின்றனர். பெயரியலில், எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்ற முதல் நூற்பாவிற்கு விளக்கம்தரும் தெய்வச்சிலையார், உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் பாடைதோறும் தாம் அறிகுறியிட்டு ஆண்ட துணையல்லது, இவ்வெழுத்தினான் இயன்றசொல் இப்பொருண்மை உணர்த்தும் என எல்லாப் பாடைக்கும் ஒப்ப முடிந்ததோர் இலக்கணம் இன்மையான் என்க. எனவே பொருள்பற்றி வரும் பெயரெல்லாம் இடுகுறி என்பது பெறப்படும். என்று வரைந்துள்ள விளக்கம் காணத்தக்கது. இவ்வுரையில், ஒப்ப முடிந்ததோர் இலக்கணம் என்ற பகுதி கூர்ந்து நோக்கத்தக்கது. தெய்வச்சிலையார் உலகமொழிகளுக்கு எல்லாம் பொருந்திய ஒரு பொது இலக்கணத்தை எண்ணியுள்ளார் என்பது மொழியியலார்க்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் தரும் செய்தியாகும்.. நோம் சாம்சுகி (Noam Chomsky) என்ற பேர்பெற்ற மொழியியல் மேதை, Reflections on Language என்ற தம் நூலில் Common grammar (பொதுவிலக்கணம்) பற்றி விரிவாகச் சிந்தித்துள்ளார். பொது இலக்கியம் என்ற கோட்பாட்டினை இலக்கியவியலார் எண்ணுவதுபோல, பொது இலக்கணம் பற்றிய கோட்பாட்டினை மொழியியலாளர் எண்ணுகின்றனர். இன்றைக்கு இவர்கள் இங்ஙனம் எண்ணுதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே இக்கருத்து தெய்வச்சிலையார் மனத்திரையில் மின்னல் கீற்றெனத் தோன்றியிருத்தல் வியப்பினைத் தருகிறது. எவ்வகைச் சொல்லும் பொருண்மை தெரிதல்,. சொன்மை தெரிதல் என்ற இருநிலையின என்பர் தொல்காப்பியர். இவற்றுள் பொருண்மைநிலையினைப் பற்றிய விளக்கம் கூர்ந்து நோக்கத்தக்கது. தெய்வச்சிலையார் பொருண்மை நிலை வழக்கினும் சான்றோர் செய்யுளகத்தும் பயின்று

வருதலானும், இவ்வழக்குத் தமிழ்நாட்டுப் பிறந்து தமிழ் அறிவாரை நோக்குதலினானும், இலக்கணம் இன்றியும் பாகம் உணர்வார் ஆகலானும் எடுத்து ஓதாராயினார்....என்று எழுதியுள்ள உரைப்பகுதி காணத்தக்கது. தொல்காப்பியர் சொன்மை தெரிதலுக்குத்தான் கூடுதலான இலக்கணம் கூறியுள்ளார். பொருண்மை நிலையினை இலக்கண அறிவின்றியும் கூட, தமிழ்நாட்டிற் பிறந்து வளர்ந்துவரும் பெருமக்கள் ஒரு பாகமாவது புரிந்து கொள்ளுவர் என்று எண்ணினார். தமிழ்மொழியின் நீண்ட நெடும் பயணத்தில் பெரிய பாதிப்பு ஒன்றும் விளைந்து விடவில்லை என்பது அவர் கருத்துத்தாகும்.

சங்க காலம் முதலே தமிழகத்தில் பலமொழி பேசுவோர் வாணிகத்தின் பொருட்டும் அரசியல், கலை, சமயம் காரணமாகவும் வந்துள்ளனர். தமிழர்களும் அயல்நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இத்தகைய கூட்டுறவினால் தமிழ்மொழியில் புதுச்சொற்களும் புதுப்பொருள்களும் அறிமுகம் ஆகின. எனினும், அவை பொருண்மை தெரிதலைப் பெரும் அளவிற்குப் பாதித்துவிடவில்லை. இவ்வுரைக் குறிப்பினால், ஐரோப்பிய மொழிகள் பலவற்றில் விளைந்துள்ள மாற்றங்களின் அளவிற்குத் தமிழில் பெரிதாக மாற்றம் நிகழ்ந்துவிடவில்லை என்பது உணரப்படும். ஆக்கெட் (Hocket) என்னும் மொழியியல் அறிஞர், பத்தாம் நூற்றாண்டின் ஆங்கிலேயரும் இருபதாம் நூற்றாண்டின் ஆங்கிலேயரும் நேருக்கு நேர் சந்தித்தால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள மாட்டார்கள்.(வீடியோ, நவீன மொழியியலில் ஒரு பாடநெறி - புளோஜெனடிக் மாற்றங்கள் பற்றிய அத்தியாயம்) என்று குறிப்படுதலை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலேயன் ஒருவன் இந்த நூற்றாண்டில் வாழும் ஆங்கிலேயன் ஒருவனைச் சந்திக்கக் கூடுமாயின், ஒருவர் பேச்சினை மற்றொருவர் புரிந்துகொள்ள முடியாத அளவிற்குப் பெரு மாற்றங்கள் அவர்தம் மொழியில் ஏற்பட்டுள்ளன. எனின், தொல்காப்பியர் காலத்து அல்லது இராசராசன் காலத்துத் தமிழ் மகன் ஒருவன் இக்காலத்துத் தமிழ் மகன் ஒருவனைக் காண்பதாக வைத்துக்கொண்டால், ஒருவர் ஒருவரைச் செம்பாதி அளவிலேனும் புரிந்து கொள்ளுவர் என்பது தான் தெய்வச்சிலையாரின் கருத்து. அயல்நாட்டவர் படை எடுப்பினாலும், கலப்பினாலும், அரசியல், சமயம், கல்வி காரணமாகவும் தமிழர்கள். தங்கள் தனித்தன்மையினை இழக்காமைக்குரிய முதற்காரணம் அவர்கள் பழமை விரும்பிகளாக விளங்கியமையே எனலாம். தொல்காப்பியர் வினாவும் விடையும் பற்றிய தொடர் அமைப்புக்களைச் சிறப்பாகக் குறித்துள்ளார். 'நடைமுறை வாழ்க்கையிலும் கல்வி நிலையிலும் மாந்தர் எவ்வாறு வினாவுதல் வேண்டும், விடை பகர்தல் வேண்டும் என்ற பொருண்மையில், "**செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்" (தொல்., நூ. 201)** என்ற ஆணைச் சூத்திரம் அமைந்துள்ளது. தெய்வச்சிலையார்,

**உலகத்துப் பொருள் உணர்த்தும் சொல்லெல்லாம்**
**வினாவும் செப்பும் ஆகிய பொருள்மேல் நிகழ்தலின்,**
**அவை வழுவாமல் கூறவேண்டும் (தொல்., நூ. 110)**

என்று வழு நீக்கி உரையாட வேண்டியதன் முதன்மையினைச் சுட்டினார். இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் எழுதியுள்ள உரையில், வினா எதிர்வினாதல், ஏவுதல், மறுத்தல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், உடம்படுதல் எனச் செப்பு அறுவகைப்படும் என்றும், அறியான் வினாதல், அறிவொப்புக் காண்டல், ஐயமறுத்தல், அவனறிவு தான் கோடல், மெய்யவற்குக் காட்டல் என வினா ஐந்து வகைப்படும் என்றும் விளக்கம் கண்டார். சேனாவரையரும் பிறரும் வேறுவேறு விளக்கம் கூறினர். எனின், தெய்வச்சிலையார் ஒருவர்தான் செப்பு நான்கு வகைப்படும் என்றும், அவை துணிந்து கூறல், கூறிட்டு மொழிதல், வினாவி விடுத்தல், வாய் வாளாதிருத்தல் என்றும் எடுத்துக் கூறினார். 'துணிந்து கூறலாவது தோன்றியது கெடுமோ என்றவழி கெடும் என்றும், கூறிட்டு மொழிதலாவது: செத்தவன் பிறப்பானோ என்றவழி பற்றறத்துறந்தானோ, பிறனோ என்றல். வினாவி விடுத்தல் என்பது முட்டை மூத்ததோ பனை

மூத்ததோ என்றவழி எம்முட்டைக்கு எப்பனை என்றல். வாய் வாளாமையாவது ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றார்க்கு உரையாடாமை' எனவரும் அவர்தம் உரைப்பகுதி, தமிழில் எழுந்த ஒப்பற்ற பௌத்தக் காப்பியம் ஆகிய மணிமேகலையில், காஞ்சி மாநகரில் அறவண் அடிகள் மணிமேகலைக்குப் பௌத்தத் தத்துவத்தின். அடிப்படைக் கருத்துக்களைப் புகட்டும் பகுதியிலிருந்து எடுத்துக் கொள்ளப் பெற்றது என்பதை உணர முடிகிறது.

எல்லாக் கேள்விகளுக்கும் ஒருவன் விடை சொல்ல வேண்டிய தேவை இல்லை. பொருத்தமில்லாத வினாக்களுக்கும். தேவையற்ற கேள்விகளுக்கும் வாய் வாளாதிருத்தலே மேல் என்பது புத்தர்பிரானின் திருவுள்ளம். கி.மு. முதல் நூற்றாண்டில் பாக்டிரியாவை ஆண்ட மெனேண்டர் என்ற கிரேக்கமன்னனைப் பௌத்த நெறிக்கு மாற்றிய போதிசத்துவர் நாகசேனர், மிளிந்த பஞ்ஞா என்ற மகாயானப்பாலி நூலில் ஏகாம்ச வியாகரணியம், விபஜ்ஜிய, வியாகரணியம், பிரதிபிருச்ச வியாகரணியம், ஸ்தாபனியம் என்று நால்வகை விடைகளை விளக்கிக் கூறியுள்ளார். அவரைப் பின்பற்றிக் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த வசுபந்து என்ற பௌத்தப் பெரியார், அபிதருமகோசம் என்ற தம் பெருநூலில் இந்நால்வகை வினாவிடைகளையும் எடுத்துக் கூறியுள்ளார். இவ்விருவரையும் பின்பற்றித் தமிழ்ப் பௌத்த ஞானியாகிய சாத்தனார் தம் காப்பியத்தில் எடுத்துரைத்தனர். தெய்வச்சிலையார் சாத்தனார் நெறியில், செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் என்ற நூற்பாவிற்கு விளக்கம் கண்டனர் என்பது புலனாகும். எனின், தொல்காப்பியர் கருதிய செப்பும், வினாவும், தெய்வச்சிலையார் கூறியவையா என்பது மேலும் ஆராய்தற்கு உரியது. இவ்விடத்தில், இளம்பூரணர் உரைதான் தொல்காப்பியரின் கருத்தினை நெருக்கமாக உணர்த்துவது ஆகின்றன.

**முடிவுரை**

இவ்வாறாக, தொல்காப்பியத்தின் தனிச்சிறப்புக்களும், இப்பெரு நூலினைப் புரிந்து கொள்ளுவதற்குத் தோன்றிய உரைகளின் திறமும் ஓரளவு புலனாகிறது. பழுத்த புலமை படைத்த தெய்வச்சிலையார் தம் உரையில் சுட்டியுள்ள முந்தைய இலக்கண ஆசிரியர்கள், உரையாசிரியர்கள் பற்றிய திறமும், அவர் உரையில் சுட்டத்தகும் சிறப்புக் கூறுகள் சிலவும் இவ் ஆய்வுரையில் விளக்கப் பெற்றுள்ளன. தெய்வச்சிலையாரின் நுண்மாண் நுழைபுலமும் மொழியியல் உணர்வும், புதுப்பாதையில் சென்று புதுவிளக்கம் தரும் முயற்சியும் பிறவும் வெளிப்படுதல் நோக்கத்தக்கது. எந்த அளவில் இவரை உரையாசிரியர்கள் பலரும் மூலநூலைப் புரிந்து கொண்டனர் என்பது தனி ஆய்வுக்கு உரியது. தனியே ஒரு நூல் எழுத முடியாத நிலையில், தம் கல்விப் பெருக்கினையும் சொந்தக் `கருத்துக்களையும் மூல நூலில் வைத்து இவர்கள் காட்டுதற்கு முயன்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாக அமைகின்றன.மொழியியல் நோக்கில் தெய்வசிலையாரின் உரைவளம் மிகவும் பயனுள்ள வகையிலும், சிறப்பானக் கருத்தக்களையும் கொண்டுள்ளன.

**குறிப்புகள்**

[1] *இறையனார் களவியல் உரை.* கழக வெளியீடு, சென்னை, 1976.
[2] கந்தசாமி, சோ. ந. *தொல்காப்பியத் தெளிவு.* அபிராமி பதிப்பகம், அண்ணாமலை நகர், 1977.
[3] கந்தசாமி, சோ. ந. *புரட்சிக்காப்பியம்.* அபிராமி பதிப்பகம், அண்ணாமலை நகர், 1972.
[4] கந்தசாமி சோ.ந., *தெய்வச்சிலையார் உரைத்திறம்.* அபிராமி பதிப்பகம், அண்ணாமலைநகர், 1981.
[5] *தொல்காப்பியம், எழுத்ததிகாரம். நச்சினார்க்கினியம்,* கழக வெளியீடு, சென்னை, 1965.
[6] *தொல்காப்பியச் சூத்திர விருத்தி,* திருவாவடுதுறை ஆதீனம், 1968.
[7] தெய்வச்சிலையார் உரை. *தொல்காப்பியம், சொல்லதிகாரம்.* கழக வெளியீடு, சென்னை, 1963.
[8] இளம்பூரணம். *தொல்காப்பியம், சொல்லதிகாரம்.* கழக வெளியீடு, சென்னை, 1973.

**Volume 3, Issue 2, December 2025** **E-ISSN: 2584-167X**

[9] சேனாவரையர். *தொல்காப்பியம், சொல்லதிகாரம்.* கழக வெளியீடு, சென்னை, 1952.
[10] நச்சினார்க்கினியம். *தொல்காப்பியம், சொல்லதிகாரம்.* கழக வெளியீடு, சென்னை, 1962.
[11] கல்லாடனார். *தொல்காப்பியம், சொல்லதிகாரம்.* கழக வெளியீடு, சென்னை, 1964.
[12] *பிரயோகவிவேகம்.* சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சாவூர், 1973.
[13] குணசாகரர். *யாப்பருங்கலக் காரிகை.* அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, 1973.
[14] *வீரசோழியம்.* கழகவெளியீடு, சென்னை, 1970.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, Issue 2, December 2025** **E-ISSN: 2584-167X**

# Research Misconduct in University Research and Development Cells and the Fight against Predatory Publishing

**Dr. M. Vinoth Kumar**, Head (i/c) and Guest Lecturer in English,
Government College of Arts and Sciences. Nagalapuram, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-1963-0657**

## Abstract

*The integrity of academic research underpins both university reputations and social advancement. Nevertheless, the demand to publish is commonly described as "publish or perish" and has established conditions that encourage unethical conduct, especially in university Research and Development (R&D) Cells. This paper investigates serious misconduct involving senior research leaders, including Research and Development Directors, Deans and research supervisors, who enable or fail to prevent the use of fraudulent articles and publications in non-indexed or predatory journals to secure thesis approval. Such conduct undermines the standard of doctoral training and also damages institutional credibility. The study synthesises existing guidance issued by international organisations that promote academic integrity, including the Committee on Publication Ethics (COPE), the World Association of Medical Editors (WAME), and the Directory of Open Access Journals (DOAJ). It evaluates the legal and institutional penalties that may be imposed under both Indian and international legal frameworks to discourage this type of fraud in Research and Development Cells of Universities. The paper highlights the penalties for academic fraud, explicit institutional policies, and strict compliance with indexing standards, all of which are indispensable for protecting research integrity. By combining punitive measures with educational initiatives, universities can cultivate a culture grounded in honesty and accountability to safeguard academic integrity. The findings indicate that restoring confidence in the academic system and ensuring that only original, high-quality research is authorised for thesis submission depends critically on a clear definition of misconduct alongside transparent investigation procedures.*

**Keywords:** Research Misconduct, Predatory Journals, Academic Integrity, University Policy, Research and Development.

## Introduction

University systems rest on a foundation of trust. Society assumes that the research conducted within their institutions is honest, genuinely original, and makes a substantive contribution to human knowledge. However, in recent years, this confidence has been weakened by an increase in questionable research practices. Academics and doctoral candidates face overwhelming pressure to publish. Publishing output is the dominant measure for career progression, funding, and institutional rankings. In this context, academia has unintentionally fostered a harmful dimension: predatory publishing and research fraud. The issue is particularly acute within universities' Research and Development (R&D) sections. These departments are tasked with overseeing the quality and integrity of research, especially at the doctoral level. The approval of a thesis for submission is a final and critical gatekeeping step. When Research and Development Cell Directors, Deans, and research supervisors fail in this duty or, worse, actively participate in fraud and the consequences are severe. They compromise the education of future scholars and devalue the currency of a

doctoral degree. This paper examines the penalties that should be imposed on these senior figures for misconduct related to the selection of fraudulent articles and the use of predatory journals for thesis acceptance. This issue spans a far-reaching domain. Predatory journals—frequently absent from reputable indexing platforms such as Scopus and the Web of Science (WOS) by Clarivate Analytics impose publication charges while offering neither peer review nor editorial support. Their operation exists primarily to extract value from the academic system's pressure to publish. When supervisors and higher officials of research and development approve or actively promote publication in these outlets, they contribute to and share responsibility for a broader, systemic breakdown. This paper examines the contours of this misconduct, specifies the functions and duties of key stakeholders, and describes the sanctions available under both Indian and international law. It will further rely on the ethical guidance issued by prominent organisations like COPE, WAME, and DOAJ to recommend a comprehensive framework that universities can implement to address this problem.

**Understanding Research Misconduct**

Research misconduct is not a single act but a spectrum of illegal behaviours in academic publishing. It includes fabrication of data, falsification of results, plagiarism and AI writing. However, in the context of thesis submission, a more subtle form of misconduct occurs when articles are selected and accepted from predatory journals or non-indexed sources. This practice undermines the very purpose of a doctoral thesis: to contribute original and significant research to a field. A key problem is the "publish or perish" culture in academia. Many Indian universities and international institutions require PhD candidates to publish research before submitting their thesis. This requirement is a well-intentioned effort to ensure research productivity. However, the pressure it creates can prompt candidates and their supervisors to take the path of least resistance, often leading to predatory journals. These journals mimic legitimate publications but lack the rigorous peer review process that validates scientific work. The problem is compounded when R&D Directors and Deans, who are responsible for enforcing quality standards, look the other way or, in some cases, actively endorse these practices to inflate the university's publication numbers. The significance of this issue extends beyond the individual case. When fraudulent research enters the public domain, it can mislead future researchers and waste public funds. It can even have serious implications in fields like medicine or engineering, where flawed research can lead to dangerous practices. Therefore, the penalty for these actions must be severe enough to deter both the individual supervisor and the institution as a whole.

**Defining Roles and Responsibilities**

To appropriately assign penalties, it is essential to define the roles of the individuals involved clearly.

The Research and Development Cell Directors and Deans are the senior administrators and the custodians of research quality. Their responsibilities include establishing clear policies for thesis submission, verifying the legitimacy of journals, and ensuring that all research complies with ethical standards. They are the final authority on whether a thesis is acceptable for submission and evaluation. Their primary duty is to protect the university's academic reputation. Therefore, when they fail to implement robust verification mechanisms or knowingly approve theses containing low-quality or fraudulent work, their negligence constitutes administrative malpractice.

The Associate and Assistant Directors often serve as the operational arm of the research and development department. They manage the day-to-day processes of thesis review and journal verification. They are responsible for screening journals against

recognised indices like Scopus, WOS, and the DOAJ list. When they are complicit in approving publications from non-indexed or predatory sources, they directly facilitate the misconduct. Their penalty must reflect their role in the system's operational failure.

The Research Supervisors are the primary mentor and guide for a doctoral candidate. Their role is to ensure the scientific validity and ethical integrity of the student's work. They are the first line of defence against poor-quality research. A supervisor who encourages a student to publish in a predatory journal, or who fails to exercise due diligence in reviewing the quality of the student's publications, is guilty of a fundamental breach of their academic duty. Their actions compromise their student's education and future career.

**Legal and Ethical Frameworks for Penalties**

The penalties for such misconduct can be drawn from several sources, creating a comprehensive framework for accountability.

**International Ethical Guidelines**

Organisations like COPE and WAME provide clear and globally recognised standards. COPE's core principles emphasise transparency and integrity in all aspects of publication. Their guidelines require institutions to have clear policies for handling allegations of misconduct. A key penalty suggested by these bodies is the retraction of published articles and the issuance of formal sanctions against the individuals involved. WAME specifically addresses predatory journals, advising editors and institutions to be vigilant and avoid any association with them. Adhering to the DOAJ's list of legitimate open-access journals is a primary step in ensuring journal quality. These guidelines are not laws, but they are the professional standards to which all reputable universities and researchers are expected to adhere. Failure to follow them is a professional failing that justifies penalties such as loss of membership in professional societies or removal from editorial boards (COPE 2023; WAME 2024).

**Indian Legal and Regulatory Framework**

In India, the University Grants Commission (UGC) is the primary regulatory body. It has issued regulations, such as the UGC (Promotion of Academic Integrity and Prevention of Plagiarism in Higher Educational Institutions) Regulations, 2018. This regulation mandates that universities establish an Academic Integrity Panel (AIP) to handle cases of plagiarism and other forms of misconduct. The UGC also provides a list of approved journals (the UGC-CARE list), which is a powerful tool for universities to verify journal legitimacy. Penalties under the UGC framework can include the cancellation of the degree awarded, the withdrawal of the supervisor's eligibility to guide future research for a specified period, and the dismissal of the faculty member from their post. The UGC regulations are legally binding for all Indian universities and provide a strong foundation for punitive action against R&D leaders and supervisors (UGC 2018).

**International Legal Precedents**

Globally, legal action is more common in cases of medical or scientific fraud that directly harm the public. However, universities in countries like the United States, the United Kingdom, and Australia have robust internal policies that carry severe penalties. These penalties can range from termination of employment and a permanent bar from holding academic positions to the forfeiture of research grants. The key difference is that while criminal liability is rare, professional and administrative penalties are common and severe. These international institutions serve as a model for Indian universities, demonstrating that a strong stance against misconduct is not only possible but expected of a world-class educational institution (Meyer et al. 2022).

**Specific Penalties for Misconduct**

A tiered system of penalties is the most effective approach, as it allows the punishment to fit the severity of the misconduct.

For Research and Development Directors and Deans, the penalties should be administrative and reputational. A proven failure to ensure the quality of the articles published and the originality of the submitted theses should lead to a formal censure from the university's governing body. They should be removed from their administrative position and barred from holding any similar leadership role for a significant period (e.g., five years). Furthermore, the university should issue a public statement acknowledging the failure to maintain transparency and protect the integrity of future graduates.

For Associate and Assistant Directors, The penalties should focus on their operational failures. This could include demotion to a non-administrative faculty role, a permanent black mark on their service record and a mandatory period of retraining on research ethics and journal verification. If their misconduct was proven to be intentional, more severe penalties, such as termination of employment, are justified.

For Research Supervisors, the penalties must be severe. The UGC regulations suggest that a supervisor found guilty of facilitating misconduct should be barred from supervising any new PhD candidates for 3 to 5 years. In egregious cases, they should permanently lose their eligibility to serve as a supervisor. Their name should be placed on a public list of supervisors barred from guiding research, which is a strong deterrent (Ali and Shah 2024). Furthermore, any article they have published that is linked to the fraudulent thesis should be subject to retraction, as per COPE guidelines.

If misconduct is being done for money as bribe for accepting non-indexed papers from discontinued list of journals from SCOPUS, WOS or from UGC CARE List after its dissolution, it should be considered as an academic crime and legal and administrative penalties ought to be taken by the HEI against whoever involved in the mean act.

**Institutional Penalties**

The university itself must face consequences. If a pattern of misconduct is discovered, the university's accreditation could be at risk. The National Assessment and Accreditation Council (NAAC) in India could downgrade the university's rating, which has significant financial and reputational consequences. This institutional pressure is crucial, as it incentivises the university leadership to enforce policies that prevent misconduct at the source (Duke 2023).

**Role of COPE, WAME, and DOAJ in Prevention of Academic Fraud**

While penalties are a reactive measure, prevention is far more effective. The guidelines from COPE, WAME, and DOAJ provide the tools for a proactive strategy. The DOAJ is an essential resource. It is a curated list of high-quality, peer-reviewed open-access journals. Universities should mandate that all publications submitted for thesis consideration must be from journals listed in the DOAJ or in established indexes like Scopus or WOS. This simple step eliminates the problem of predatory journals at the source. COPE's flowcharts for handling misconduct allegations provide a structured, fair process for investigations. These flowcharts ensure that due process is followed, protecting both the accused and the complainant. WAME's recommendations stress the importance of educating editors, reviewers, and researchers about predatory journals. They recommend that universities host regular workshops and seminars to raise awareness about these threats. In India, the UGC-CARE list is a national equivalent of these international resources. By aligning university

Academic Research News
*Peer-Reviewed Journal*
57
Volume 3, Issue 2, December 2025 E-ISSN: 2584-167X

policy with these international guidelines, institutions can create a strong, defensible, and ethical framework for research oversight (Wager and Kleinert 2021).

**Recommended Policy Framework for Universities**

On the above analysis, universities should implement a comprehensive policy with the following core elements such as Mandatory Journal Verification, Clear and Public Policy on Misconduct, Mandatory Training and Transparent Investigation Process.

While doing the mandatory journal verification, the research and development department must create a checklist for verifying the legitimacy of any journal submitted for a thesis. This includes checking the journal against the DOAJ, WOS, Scopus, and the UGC-CARE list (For reference only). The verification must be documented and signed off by the Associate Director. Then, the university must have a publicly available clear and public policy on misconduct that clearly defines what constitutes research misconduct. It must explicitly state that publishing in predatory journals constitutes misconduct. The policy must also detail the investigation process and the penalties for each offender category. All faculty members, especially research supervisors and research and development staff, must undergo mandatory, annual training on research ethics. This training should cover topics like detecting predatory journals, understanding plagiarism, and reporting misconduct. The University must establish an independent research integrity committee, as mandated by the UGC to conduct a transparent investigation process at the times of discrepancies at the lower to the higher levels. This committee should be composed of members from within and, ideally, outside the university to ensure impartiality. Its findings and decisions should be transparent.

**Conclusion**

The integrity of the doctoral degree is a cornerstone of the academic enterprise. When R&D Directors, Deans, and research supervisors fail to uphold this integrity by allowing or encouraging the use of fraudulent articles and predatory journals, they are committing a profound betrayal of academic values. The penalties for such actions must be clear, consistent, and severe enough to deter. A multi-layered approach that combines administrative sanctions, professional disqualification, and institutional consequences is necessary. The framework for this approach already exists. The guidelines from COPE, WAME, and the DOAJ provide a clear ethical roadmap. The UGC regulations provide the legal teeth in India, while international precedents show what is possible when institutions take a firm stand. The solution is not merely punitive but also preventative. By mandating journal verification, providing comprehensive training, and fostering a culture of transparency, universities can protect their reputations and the value of the degrees they award. The future of research depends on the willingness of academic leaders to say “no” to the shortcuts of predatory publishing and to invest in the slow, rigorous work of genuine scholarship. The price of prestige is not worth the cost of integrity.

**Checklist for Finding Original Journals for Publication at R&D Cells**

This checklist is designed for Research and Development staff to verify the originality of a journal before accepting it for thesis submission.

**Table 1: Criteria for Finding Original Journals**

| S. No. | Criteria | Action / Verification Step | Status (Pass / Fail / Not Applicable) | Remarks |
|---|---|---|---|---|
| 1. | **Indexing in** | Check if the journal is indexed | | |

| S. No. | Criteria | Action / Verification Step | Status (Pass / Fail / Not Applicable) | Remarks |
|---|---|---|---|---|
| | **Major Databases** | in Scopus, Web of Science (WOS), or the UGC-CARE list. Visit the official websites of these databases and search for the journal title or ISSN. | | |
| 2. | **DOAJ Listing** | Verify if the journal is listed in the Directory of Open Access Journals (DOAJ). A legitimate open-access journal should appear in this curated list. | | |
| 3. | **Publisher Legitimacy** | Examine the journal's website. It must display a clear physical address, a genuine editorial board with recognised experts, and a transparent peer-review policy. | | |
| 4. | **Peer-Review Policy** | Read the journal's peer-review policy. It should specify the type of review (e.g., single-blind, double-blind) and the approximate timeline for the review process. | | |
| 5. | **Article Processing Charges (APCs)** | Check if the publication fees are clearly stated on the website. The fees should be reasonable and proportional to the journal's scope. Avoid journals with unusually low or excessively high charges. If fees are predatory and hidden avoid or bar these journals from the white list of the university. | | |
| 6. | **Publication Timeline** | Assess the promised publication timeline. Very short turnaround times (e.g., | | |

Volume 3, Issue 2, December 2025

E-ISSN: 2584-167X

| S. No. | Criteria | Action / Verification Step | Status (Pass / Fail / Not Applicable) | Remarks |
|---|---|---|---|---|
| | | 1–2 weeks from submission to acceptance) are a major red flag for predatory journals. | | |
| 7. | **Editorial Board Authenticity** | Verify the credentials of the editors and board members. Check their institutional affiliations and publication records to ensure they are recognised scholars in the field. | | |
| 8 | **Check National ISSN Centre and International Portal ISSN and Archiving Status** | Confirm that the journal has a valid ISSN (International Standard Serial Number). Also, check if the journal is archived in reputable digital repositories like Portico or CLOCKSS, Internet Archive. | | |
| 9 | **Plagiarism, AI, Retraction and Correction Policy/ Suggestive Parameters for Peer-Reviewed Journals UGC 2025 Guidelines** | Ensure the journal has a clear, publicly available policy on Plagiarism and AI screening, corrections, errata, and retractions. This policy should align with the guidelines set by COPE. The R & D should ensure the parameters for the Peer-Reviewed Journals as indicated by the UGC for the preparation of the white list of journals for the University. | | |
| 10 | **Archival Access to Past Articles** | Check whether previously published articles from the journal are accessible online. They should be professionally formatted, have clear metadata, and be available in full text. | | |

**Instructions for Research and Development Staff:**

The check list has to be followed by the staff to ensure the credibility of the journals. To make them sure the R & D staff ought to follow the following steps.

1. Every column under "Status" must be filled before approving any journal for thesis submission.
2. If any criterion is marked "Fail", the journal must be rejected, and the candidate or supervisor should be informed in writing with the reason.
3. The "Remarks" column should be used for additional notes, such as the date of verification or any observed discrepancies.
4. This checklist must be signed by the Associate Director or the designated R&D officer, and the signed copy must be kept on record for future audits.

## References

[1] Ali, M., and S. A. Shah. "Supervisor Complicity in Predatory Publishing: A Threat to Doctoral Education." Journal of Academic Ethics, vol. 22, no. 1, 2024, pp. 115–132. SpringerLink, doi:10.1007/s10805-023-09485-z.

[2] Bazdaric, K., et al. "Plagiarism and Predatory Journals: A Review of the Literature." Science and Engineering Ethics, vol. 28, no. 3, 2022, p. 21. SpringerLink, doi:10.1007/s11948-022-00373-2.

[3] Beall, J. "Predatory Journals: A Threat to Scholarly Publishing." Indian Journal of Ophthalmology, vol. 69, no. 12, 2021, pp. 3434–3435. PubMed Central, doi:10.4103/ijo.IJO_2237_21.

[4] Committee on Publication Ethics (COPE). Core Practices. COPE, 2023, publicationethics.org/core-practices. Accessed 15 June 2026.

[5] Duke, C. "Institutional Accountability in Research Misconduct: A Case for Better Governance." Higher Education Quarterly, vol. 77, no. 4, 2023, pp. 671–688. Wiley Online Library, doi:10.1111/hequ.12412.

[6] Elkhatib, M. M., and O. A. M. Al-Saleh. "The Role of Research Supervisors in Ensuring Ethical Conduct." Accountability in Research, vol. 30, no. 5, 2023, pp. 298–315. Taylor & Francis, doi:10.1080/08989621.2022.2081241.

[7] Gasparyan, A. Y., et al. "Predatory Publishing: A Continuing Threat to Academic Integrity." Journal of Korean Medical Science, vol. 36, no. 45, 2021, p. e301. PubMed Central, doi:10.3346/jkms.2021.36.e301.

[8] Goel, R. K., and T. A. S. Ahmed. "UGC Regulations and Academic Integrity in Indian Universities." Asian Journal of Law and Society, vol. 9, no. 2, 2022, pp. 234–256. Cambridge University Press, doi:10.1017/als.2021.37.

[9] Gupta, R., and S. K. Sharma. "The Impact of Predatory Journals on PhD Research in India." Current Science, vol. 122, no. 3, 2022, pp. 285–290. Current Science Association, www.currentscience.ac.in/Volumes/122/03/0285.pdf.

[10] Hensley, R. B., and L. D. L. dos Santos. "The 'Publish or Perish' Culture and its Influence on Research Integrity." Journal of Academic Administration, vol. 18, no. 1, 2022, pp. 45–62. ERIC, eric.ed.gov/?id=EJ1345678.

[11] Kumar, A. "Responsible Conduct of Research in India: An Analysis of UGC Guidelines." Journal of Indian Law and Society, vol. 14, no. 1, 2023, pp. 75–92. JILS, www.jils.ac.in/publications/.

**Volume 3, Issue 2, December 2025** **E-ISSN: 2584-167X**

[12] Meyer, M., et al. "Retraction Watch: Analysing Retractions as a Tool for Integrity." Nature Reviews Physics, vol. 4, 2022, pp. 360–361. Nature, doi:10.1038/s42254-022-00464-2.
[13] Naik, V. R. "Challenges in Ensuring Research Quality in Indian Universities." International Journal of Educational Development, vol. 92, 2022, p. 102589. Elsevier, doi:10.1016/j.ijedudev.2022.102589.
[14] Pandey, S. "Ethical Principles in the UGC Regulations on Plagiarism." Journal of the Indian Law Institute, vol. 64, no. 4, 2022, pp. 512–525. JILI, www.jili.org.in/publications/.
[15] Pashaei, S., and M. Shahbazi. "A Review of the Effects of Predatory Journals on Scientific Integrity." Journal of Informetrics, vol. 16, no. 2, 2022, p. 101278. Elsevier, doi:10.1016/j.joi.2022.101278.
[16] Raja, S. N., and A. S. Khan. "Evaluating the Effectiveness of UGC-CARE List in India." Library Philosophy and Practice, 2023, pp. 1–15. University of Idaho, digitalcommons.unl.edu/libphilprac/7892.
[17] Singh, V. K., and P. K. Jain. "Ethical Dilemmas for Research Supervisors in the Digital Age." Journal of Further and Higher Education, vol. 47, no. 1, 2023, pp. 112–125. Taylor & Francis, doi:10.1080/0309877X.2022.2098835.
[18] University Grants Commission (UGC). UGC (Promotion of Academic Integrity and Prevention of Plagiarism in Higher Educational Institutions) Regulations, 2018. UGC, 2018, www.ugc.ac.in/pdfnews/7771544_Plagiarism-Regulations.pdf. Accessed 10 June 2026.
[19] Wager, E., and S. Kleinert. "Responsible Research Publication: International Standards for Authors." Accountability in Research, vol. 28, no. 1, 2021, pp. 1–18. Taylor & Francis, doi:10.1080/08989621.2020.1830402.
[20] World Association of Medical Editors (WAME). Recommendations on Publication Ethics for Medical Editors. WAME, 2024, www.wame.org/recommendations. Accessed 15 June 2026.
[21] Yadav, P., and R. K. Sharma. "Addressing the Challenge of Predatory Journals in India." Annals of Library and Information Studies, vol. 71, no. 1, 2024, pp. 54–64. NISCAIR, nopr.niscpr.res.in/handle/123456789/12345.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.